விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 14 வியாழக்கிழமை (28.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 40

## பாதுகாப்பு செயலர் நேற்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக பாதுகாப்புச் செயலாளர் பி.எம்.யூ.டி.பஸ்நாயக்க, நேற்று புதன் கிழமை யாழ்ப்பாணத்துக்கு திடீர்

23ஆம் பக்கம் பார்க்க

## ஊழல் போக்கில் இலங்கை 83

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டிற்கான 168 உலக நாடுகளின் ஊழல் போக்கு குறித்த தரநிலைப் பட்டியலில் இலங்கை 83ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. சீனா, கொலம்பியா, பெனின், லைபீரியா ஆகிய நாடுகளும் இந்தப் பட்டியலில் இலங்கைக்கு இணை

23ஆம் பக்கம் பார்க்க

# படையினரை தண்டிப்பதில் புதிய அரசும் அசமந்தம்

## மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசாங்கமும் துஷ்பிரயோகங்களில் ஈடுபடும் படையினர் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படும் கலாசாரத்துக்கு முடிவு கட்டுவதற்கான உறுதியான நடவடிக்கைகள் எதனையும் இதுவரை முன்னெடுக்கவில்லை என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தனது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் 2015 இல் காணப்பட்ட மனித உரிமை நிலைவரம் குறித்து சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஒரு தசாப்த காலமாக காணப்பட்ட அதிகளவு ஏதேச்சதிகார போக்கினை கொண்ட ஆட்சிக்கு முடிவினை கொண்டு வந்த தேர்தல்கள் முக்கிய மாற்றத்

23ஆம் பக்கம் பார்க்க

## குப்பி விளக்கு தட்டுப்பட்டதில்

# தீ விபத்து

- மாணவி படுகாயம்
- இரு மோ.சைக்கிள்கள் உட்பட பணம், நகை எரிந்து நாசம்

(புன்னாலைக்கட்டுவன்)

மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை உறிஞ்சி எடுக்க முற்பட்ட வேளை அருகில் இருந்து குப்பி விளக்கு தவறுதலாக தட்டுப்பட்டதில் பாடசாலை மாணவி ஒருவர் தீக்காயத்துக்கு உள்ளாகி படுகாய

23ஆம் பக்கம் பார்க்க



## சுதந்திர தினத்துக்குள் விடுதலையை எதிர்பார்த்து

# மீண்டும் உணவு தவிர்த்து போராட தமிழ் அரசியல் கைதிகள் ஆயத்தம்

(கொழும்பு)

நாட்டின் சுதந்திரதினத்துக்குள் (பெப்-4) தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாவிடின் 14 சிறைகளிலுமுள்ள அரசியல் கைதிகள் மண்டும் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கம் எமது மக்களையும், எம்மையும் தொடர்ந்தும் ஏமாற்றுவதால் நாம் நம்பிக்கை இழந்து வருகின்றோம். எமது விடுதலைக்காக சர்வதேசமும், எமது மக்களும் எம் பக்கம் இருந்து போராடுவதால் மிக விரைவில் வருகின்ற சுதந்திர தினத்துக்குள் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யபட வேண்டும் இல்லை

23ஆம் பக்கம் பார்க்க

## துன்னாலையில் மலைப்பாம்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி துன்னாலை வடக்கு பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் மனிதரை உயிருடன் விழுங்கும் மலைப்பாம்பு ஒன்று காணப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க


## வெள்ளைவான் அச்சுறுத்தல் விடுத்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டப்பகுதியில் உள்ள யுவதியொருவரின் வீட்டுக்குச் சென்று வெள்ளை வானில் கடத்துவோம் என்று அச்சுறுத்தல் விடுத்த மூவரை, நேற்று புதன்கிழமை காலை கைது செய்து

24ஆம் பக்கம் பார்க்க

## பிள்ளையானுக்கு விளக்கமறியல்



(கொழும்பு)

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என

23ஆம் பக்கம் பார்க்க

# 3 தமிழ் கைதிகள் நேற்று விடுவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த தமிழ் கைதிகளில் மூவர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த 21 பேரும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் ஏற்கெனவே பிணை வழங்கப்பட்டிருந்த 39 பேரும் கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆட்டிகல முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது இந்த கைதிகள் தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அறிக்கையை பயங்கர

23ஆம் பக்கம் பார்க்க

## கடலில் நாயைக் குளிப்பாட்ட இறங்கியவர் நீரில் மூழ்கி பலி

(யாழ்ப்பாணம்)

நாயை குளிக்க வைப்பதற்கு கடலில் இறங்கிய குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கைதடி வடக்கு கடலில் இடம் பெற்றது. கைதடி வடக்கைச் சேர்ந்த் செல்லையா கனகநாதன் (வயது -52) என்ற 5 பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு பரிதாபகரமாக பலியாகியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## (உ/த) விசேட சித்தி; மாணவர்களுக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)


2015ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் விசேட திறமைகளை வெளிக்காட்டிய மாணவ மாணவிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

2015 கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை, பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று நாட்டில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவ மாணவிகள் நேற்று முற்பகல்

24ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் பௌத்த விகாரை அமைக்க வேண்டும்

## பௌத்த மாணவர்கள் அமைப்பு கோரிக்கை!




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அமைவிடத்திற்கு முன்னால் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என எழுதப்பட்ட துண்டு பிரசுரங்கள் யாழ்.பல்கலைக்க்ழகத்தில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

கொழும்பில் பொது பல சேனாவின செயலாளரான கலபொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்

23ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள காணிகளின் புள்ளி விபரங்களை சேகரிப்பதற்கு தனியான நடவடிக்கைக்குழு!

## ஒரு வாரத்தில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள பொதுமக்களின் காணிகள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய காணிகள் தொடர்பான புள்ளிவிபரங்களை சேரிப்பதற்கு தனியான நடவடிக்கை

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸாரை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

இரத்தினபுரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த டீ.டபிள் யூ.சி.தர்மரத்ன மற்றும் எம்பிலி பிட்டிய பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகராக இருந்த எஸ். ஆர்.ஜே.டளஸ் ஆகியோரை உடனடி யாகக் கைதுசெய்யுமாறு குற்றப்புல னாய்வுப் பிரிவுக்கு எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

கடந்த 4-ம் திகதி இரவு எம்பிலிபிட் டிய பகுதியில் இடம்பெற்ற விருந்து நிகழ்வொன்றின் போது, பொலிஸாருக் கும் மக்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர், உயிரிழந்த சம்ப வம் தொடர்பிலேயே இவர்களைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த சம்பவத்துடன் தொடர புடைய ஏனைய பொலிஸ் உத்தியோகத் தர்களையும் கைதுசெய்து அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதவான் குறிப்பிட் டுள்ளார்

இதேவேளை, இந்த சம்பவம் தொடர் பில் மேற்குறிப்பிடப் பட்ட உயர் அதிகாரிகள உள்ளிட்ட பொலிஸ் உத்தி யோகத்தர் களுக்கு முன்னதாக இடமாற்றம் வழக் கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (செ-11)


## அறிவித்தல்

மாட்டுவண்டி சவாரிப் போட்டி தமிழர் திருநாளாம் தைப்பூச தினத்தன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட சவாரிப் போட்டி நடைபெறவில்லை,

எனவே இப் போட்டியானது காலம் – 31.01.2016 ஞாயிற் றுக்கிழமை ஒரு மணிக்கு விஸ்வமடு தொட்டியடியில் நடைபெறும் என முல்லை மாவட்ட சவாரிச் சங்கம் அறிவித்துள்ளது. அன்றைய தினமே முல்லைத்தீவு மாவட்ட சவாரிச் சங்க கூட்டமும் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல் :- முல்லைத்தீவு மாவட்ட சவாரிச் சங்கம்

(C-3583)


# ரோஹித்தவுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்த னவை எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி நீதிமன்றில் முன் னிலையாகுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

ரோஹித்த அபேகுண வர்த்தனவிற்கு எதிராக இலஞ் சம் மற்றும் ஊழல் விசா ரணை ஆணைக்குழுவினர் உயர்நீதி மன்றத்தில் கடந்த 7ஆம் திகதி வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு நேற்று விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவருக்கு நீதிமன்றம் இந்த அழைப்பாணை உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2004 முதல் 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 4.12 கோடி ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் சொத்துக்களை ரோஹித்த அபே குணவர்த்தன இலஞ்சமாக பெற் றுள்ளதாக தெரிவித்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வாடகைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0750395005

(3414)

## ஆங்கில வகுப்புக்கள்

தரம் 9 ,10, 11 க்கு தனியாகவோ / குழுக்களாகவோ வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(மாதாந்த கட்டணம் ரூ. 200/=)

திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் (3421) தொடர்பு:- 0755314206

## Akam Children Daycare & Montessori

2016 புதிய ஆண்டின் அனுமதி

அரச உத்தியோகத்தர்களே உங்கள் பிள்ளைகளை இணைப்பதற்கான அரியவாய்ப்பு (வயது 2 1/2 முதல் 5 வரை)

மாதாந்தக் கட்டணம் ரூபா 2000 மட்டுமே...

அனுமதிக்கட்டணம் இலவசம்

விண்ணப்பங்களை முன்பள்ளியில் பெற்றுக்கொள்ளலாம்

காலை 7.45 மணிமுதல் 5 மணிவரை

Medium of Instruction English & Tamil

தொடர்புகளுக்கு: சா.பபிசன் 0778 480 615

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, அருகாமை கோண்டாவில்.

(C-3579)

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வடமாகாண அலுவலர், மத்திய வங்கி பயிலுநர், சட்டமாணி, SLAS, SLEAS, வாழ்வெழுச்சி உத்தியோகத்தர் போன்ற பரீட்சைகளுக்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு : 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

(C-3584)

## யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்

021 222 8117, 077 900 8776

(3363) Sponsored by Enlightenment Circle, UK

## University of Jaffna

UNIT OF HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE.

COMMENCEMENT OF ACADEMIC ACTIVITIES

B.Sc. in Medical Laboratory Sciences, B.Sc. in Nursing and Bachelor of Pharmacy

The Orientation Programme for the newly admitted first year students to the Unit of Allied Health Sciences, Faculty of Medicine, and University of Jaffna for the Academic Year of 2015/2016 will commence on Monday, 8th of February 2016 at 9.30am at the **Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil.**

The new students are requested to participate in the Orientation Programme without fail.

Registrar
University of Jaffna 28.01.2016

(C-3582)

## மாபெரும் புத்தகக் கண்காட்சி

மக்மிலன் புத்தகசாலை

யாழ்ப்பாணம், கொழும்பு

இடம்:- யாழ். மாநகர சபை மைதானம் (சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால்)

காலம்:- 29 ,30, 31/01/2016

காட்சியறை இல :- 159, 160

பாடசாலைக்கு தேவையான அனைத்து புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
0776218383
0112449565

(3417)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை இராசையா (எக்கட்டியான்)

(ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா டெலிகொம் உத்தியோகத்தர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசையா அவர்கள் 26.01.2016 செவ்வாய்க் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, லக்சுமி ஆகி யோரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான வல்லிபுரம். பரமேஸ் வரி ஆகியோரின் அன்பு மருமகனும். ஜெயபவானி அவர்களின் அன்புக் கணவரும், வினித்தா (கனடா), இராகுலன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன், சகுந்தலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜெயமாலினி, தயாளினி, வாசுதேவன், வினோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேசன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், சந்தோஷ் (கனடா), சாருகேஷ் (கனடா) ஆகியோரின் பேரனும், செல்வரட் ணத்தின் (ரெலிகொம்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.01.2016 இன்று வியாழக்கிழமை சாமியன் அரசடி கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டு தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர். (C-3576) கரவெட்டி.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு : 26.10.1947
இறப்பு : 25.01.2016

## அமரர் வேலும்மயிலும் கணேசமூர்த்தி ஐயா

அமரர் வேலும்மயிலும் கணேசமூர்த்தி ஐயா அவர்கள் சிவபத மடைந்த செய்தி கேட்டு நாமும் இல்லக்குழந்தைகளும் பேரதிர்ச்சியடைந்தோம். ஆதரவற்றவர்களைஅணைத்து நல்வழி காட்டும் அற்புத மனிதர் கணேசமூர்த்தி ஐயா. இவர் எமது இல்லக்குழந்தைகள் மீது அன்பும் பாசமும் கொண்ட ஒருவர். இல்லக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி யிலும்அவர்களின் பராமரிப்பிலும் மிகவும் அக்கறை கொண்டு அய ராது உழைத்த உத்தமர். எமது இல்லக் குழந்தைகளை நாம் நல்லமுறை யில் வளர்ப்பதற்கு மிக நெருக்கடியான காலத்திலும் பண உதவி உள்ளிட்ட தன்னாலான சகல ஒத்துழைப்பையும் எமக்கு வழங்கி சமூக நேயத்துடன் சமூக தொண்டனாக விளங்கிய பெருமகன். அன்னாரின் இவ்வுலக மறைவானது எமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இருந்தும் மரணம் மனிதனை அழிப்பதில்லை. மரணத்தின் பின்னும் நல்ல மனிதர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் நீடு நிலைத்து வாழ்கிறார் கள். அவ்வாறே அமரர் வேலும் மயிலும் கணேசமூர்த்தி ஐயா அவர் களும் எம்மவர் அனைவரின் மனதிலும் நிலைத்து வாழ்கிறார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(C-3580)

தி.இராசநாயகம் தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள். மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.

# குற்றவாளிகளை தண்டிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**குற்றவாளிகளை தண்டிப்பதும் குற்றமற்றவர்களை நிராபராதிகள் என நிரூபிப்பதுவும் அரசாங்கத்தின் கடமையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பங்கேற்று கருத்து வெளியிட்ட போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சிலர் செய்த தவறுகளுக்காக முழு இராணுவமும் அவமானப்பட வேண்டியதில்லை.

குற்றமற்றவர்கள் குற்றவாளிகள் என அடையாளப்படுத்தப்படுவதற்கு அரசாங்கம் இடமளிக்காது.

இராணுவத்தின் மீது ஐந்து குற்றச்சாட்டுக்களை சர்வதேச சமூகம் சுமத்தியுள்ளது.

இலங்கைப் படையினருக்கு அவமரியாதை ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட முடியாது.

எனவே குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச மாநாடு ஒன்றின் போது இராணுவப் பயிற்சி குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா என்னிடம் வினவியிருந்தார்.

எனவே எமது படையினருக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ஒரு பில்லியன் டொலர் இலங்கைக்கு நிதியுதவி

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் பெற்றுக் கொடுக்கப்படும் நிதி உதவியின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2017ஆம் ஆண்டுக்காக இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக பெற்றுக் கொடுக்க. ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக. நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்த போதே. அந்த வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் மோன் மொக் சோய் இதனைக் கூறியுள்ளார்.

பெருந்தெருக்கள். குடிநீர் வேலைத்திட்டம். நீர்ப்பாசனம் உள்ளிட்ட சில துறைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலேயே இந்த நிதி வழங்கப்படுவதாக நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ)

## நான் இரண்டு நாட்களில் வெளியே வந்துவிடுவேன்

### ஞானசார தேரர் நம்பிக்கை

விளக்கமறியலில் இருந்து இரண்டு நாட்களில் தான் விடுதலை பெற்று வெளியே வந்து விடுவேன் என ஞானசார தேரர் தனது ஆதரவாளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் பதினான்கு நாட்கள் விளக்கமறியல் உத்தரவிடப்பட்டது.

இதன்போது விசேட அதிரடிப்படை பாதுகாப்புடன் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட முன்னர் ஞானசார தேரர் தனது ஆதரவாளர்கள் முன்பாக சில நிமிடங்கள் உரையாற்றினார்.

நீதிமன்றத்திற்கு வெளியே பலத்த எதிர்ப்பை வெளிக்காட்டிக் கொண்டிருந்த அவரது ஆதரவாளர்கள் மத்தியில் அவர். சட்டம் தன் கடமையை செய்யட்டும். நாம் சட்டத்திற்கு எதிராக செயற்பட முடியாது. ஆனாலும் இரண்டு நாட்களுக்குள்ளாக நான் விளக்கமறியலில் இருந்து வெளியே வந்து விடுவேன். அதுவரை பொறுத்திருங்கள் என்று தன் ஆதரவாளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட முன்பதாகவே பொதுபல சேனா அமைப்பினர் ஞானசார தேரருக்கு இரண்டு வாரங்கள் விளக்கமறியல் தண்டனை வழங்கப்படவுள்ளதாக பிரசாரப் படுத்தியிருந்தனர். தற்போது அவர் தான் இரண்டு நாட்களில் வெளியே வந்து விடுவதாக உறுதியளித்துள்ளார். (இ)

## புதிய கட்சி உருவாக்கம் குறித்து தெரிவுக் குழுவில் பேச்சில்லை

### அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய கட்சி ஒன்றின் ஊடாக போட்டியிட வேண்டும் என்ற எவ்வித மான யோசனையும் நிறைவேற்று தெரிவுக்குழுவில் முன்வைக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று தெரிவுக்குழுக் கூட்டத்தில் அதிகளவான உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் கூட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஊடகங்களின் முன் புதிய கட்சி குறித்து கருத்து வெளியிட்டவர்கள் கூட, இன்றைய நிறைவேற்று தெரிவுக்குழுக் கூட்டத்தில் அமைதியாக இருந்தனர் என அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கட்சியின் ஆலோசகர்களின் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்து கொண்டார். மற்றுமொரு ஆலோசகரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது மற்றும் கட்சியை வெற்றிபெற செய்வது தொடர்பில் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது எனவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### காவிஉடை தரித்தாலும் சட்டத்தை மீற முடியாது

நீதிமன்றை அவமரியாதை செய்வோரை தண்டிக்க வேண்டுமென மனித உரிமை செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான ஜே.சீ. வெலியமுன தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதுக்கடை உச்ச நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

காவி உடை தரித்த காரணத்திற்காக நீதித்துறை மீது அழுத்தம் பிரயோகிக்க முடியாது. அவ்வாறு செய்ய பௌத்த பிக்குகளுக்கு பொலிஸ்மா அதிபரும் சட்டமா அதிபரும் இடமளிக்கக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (இ)

## ஆசிரிய ஆலோசகர் சேவையை அமுல்படுத்த வலியுறுத்தி பேரணி

### மகஜரும் கையளிப்பு



அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையை அமுல்படுத்துமாறு கோரி வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு பேரணியும் மகஜர் கையளிப்பும் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ்.மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவில் முன்றிலில் இருந்து வட மாகாண கல்வி திணைக்களம் வரை பேரணியாக சென்று வடமாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.உதயகுமாரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்பிரகாரம் ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தர சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதை கடந்த காலம் அரசாங்கம் இழுத்தடிப்பு செய்து வந்தது. ஆனால் தற்போதைய நல்லிணக்க அரசாங்கமும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனால் இதற்கு கண்டனம் தெரிவிக்கும்வகையிலும்விரைவில் ஆசிரிய ஆலோசகர் சேவையினை கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இக் கவனயீர்ப்பு பேரணி நடைபெற்றது.





படங்கள்:-பொ.சோபிகா

இப் போராட்டம் 9 மாகாணங்களிலும்நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற்சங்கத்தினால் நேற்றையதினம் கையளிக்கப்பட்ட மகஜரில் ஆசிரிய ஆலோசகர் தொழிலின் ஆரம்பமும் இன்றைய நிலையும், ஆசிரிய ஆலோசகர்களுக்குரியதான தொழில்சார் கடமைகளும் பொறுப்புக்களும் ஆசிரிய ஆலோசகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தொழில்சார் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வது பற்றிய தற்போதைய நிலைமை போன்ற அம்சங்கள்உள்ளடக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தினால் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த பேரணியில் வட மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த 200க்கு மேற்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

# சானியா - ஹிங்கிஸ் ஜோடி இறுதிப் போட்டிக்கு தகுதி



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் சானியா மிர்சா-மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் சானியா மிர்சா-மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி - 13-ம் தரநிலை ஜோடியாக ஜூலியா ஜார்ஜஸ் - கரோலினா பிளிஸ்கோவா ஜோடியை எதிர்கொண்டது.

தொடக்கத்தில் இருந்தே ஆக்ரோஷமா விளையாடி ஆட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த சானியா ஜோடி 6-1, 6-0 என்ற செட்கணக்கில் எளிதில் வெற்றி பெற்றது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு அரையிறுதியில் செக்குடியரசின் ஆண்ட்ரியா ஹலவாக்கோவா - லூசி ஹிராடெக்கா ஜோடி, 3-6, 6-3, 6-1என்றசெட்கணக்கில் சீனாவின் சூ யிபான் - செங் ஜோடியை வென்றது.


எனவே சம்பியன் பட்டத்துக்கான இறுதிப் போட்டியில் சானியா மிர்சா - மார்ட்டினா ஹிங்ஸ் ஜோடி, ஆண்ட்ரியா ஹலவாக் கோவா - லூசி ஹிராடெக்கா ஜோடியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (க)

## தொடர்ச்சியாக 18 வெற்றிகள்

### ஷரபோவாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார் 'அமெரிக்க சூறாவளி' செரீனா

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிசின் காலிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஷரபோவாவை வீழ்த்தி அரையீறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நேற்றுமுன்தினம் அவுஸ்திரேலிய ஓபன் டென் னிஸ் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றது. இதில் மகளிர் பிரிவில் 6 முறை சாம்பியன் பட்டம் வென்ற "நம்பர் ஒன்" வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், தரவரிசையில் 5வது இடத்தில் உள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொண்டார்.



தாக்குதல் ஆட்டத்தை தொடர்ந்த செரீனா வில்லியம்ஸ் 6-4, 6-1 என்ற நேர்செட்டில் எளிதாக மரியா ஷரபோவாவை தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

இது ஷரபோவாக்கு எதிராக செரீனா தொடர்ந்து பெற்ற 18-வது வெற்றியாக அமைந்துள்ளது. இதற்கு முன் 2004ம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்சில் நடந்த 'வேர்ல்ட் டூர்' இறுதிப் போட்டியில் செரீனாவிடம் ஷரபோவா வீழ்ந்திருந்தார்.

செரீனா வில்லியம்ஸ் அரையிறுதியில் போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்காவை எதிர்கொள்கிறார். (க)


# மரண அறிவித்தல்

## சுரேந்திரன் நிருஜன்

### (ஸ்ரீலங்கா டெலிகொம் வவுனியா, தொழில்நுட்ப உதவியாளர்)



பறாளாய் சுளிபுரத்தினை பிறப்பிடமாகவும், இல.151 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரன் நிருஜன் (ஸ்ரீலங்கா டெலிகொம் வவுனியா, தொழில்நுட்ப உதவியாளர்) 25.01.2016 திங்கட்கிழமை விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை சென்றடைந்தார்.

அன்னார் சீனியர் ஒழுங்கை கலட்டியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி துரையப்பா ஐயா, பறாளாய் சுளிபுரத்தினைச் சேர்ந்த திரு.திருமதி கதிர்காமநாதன் ஐயா ஆகியோரின் அன்பு பேரனும், து.சுரேந்திரன் (ஓய்வு நிலைமேல் நீதிமன்ற பதிவாளர்), பத்மரஜனி (பாப்பா) ஆகியோரின் அன்பு மகனும், சங்கீதா (கனடா), கஜரூபன் (பொறியியலாளர்), செந்தூரன் (பொறியியலாளர்), ஆகியோரின் சகோதரனும், கேயூரநாதனின் (கனடா) அன்பு மைத்துனரும், சூடனனின் (கனடா) ஆசை பெரிய மாமாவும், அமரர் கோமாளம்பிகையின் மருமகனும், அமரர் து.வைத்திலிங்கம் மற்றும் திரு.திருமதி து.மகாதேவன், திரு.திருமதி து.சிவபாலன், திரு.திருமதி து.விவேகானந்தக்குருக்கள் ஆகியோரின் பெறாமகனும் திரு.திருமதி குகமூர்த்தி, திரு.திருமதி பாலச்சந்திரன் (கனடா), திரு.திருமதி விமலச்சந்திரன் (லண்டன்), அமரர் விஜயச்சந்திரன் (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மருமகனும் திரு.திருமதி பாண்டுரங்கனின் (கனடா) பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2016 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல :- 0773053061

(3422)

தகவல் :
குடும்பத்தினர்

# கடத்தப்பட்ட பிரகீத் எக்னெலிகொட அக்கரைப்பற்றில் வைத்து கொலை




இராணுவப் புலனாய்வாளர்களால் கடத்தப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட அக்கரைப்பற்று பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரகீத் கடத்தல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் இது தொடர்பான முக்கிய தகவல்களை திரட்டியுள்ளனர்.

தற்போதைய நிலையில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வைத்து அவரது படுகொலை நிகழ்ந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அக்கரைப்பற்றில் உள்ள காட்டுப்பகுதி அல்லது அருகில் உள்ள நடுக்கடல் பகுதியில் இக்கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கிரிதலே இராணுவ முகாமில் இருந்து கண்கள் கட்டப்பட்ட நிலையில் பிரகீத் எக்னெலிகொடவை அழைத்துச் சென்ற இராணுவ கேணல் தர அதிகாரியின் தொலைபேசி அதன் பின்னர் சில மணி நேரங்கள் கழிந்து அக்கரைப்பற்று பிரதேசத்தில் வைத்து இயக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து அவர் பிரகீத் படுகொலையுடன் தொடர்புடைய ஏனைய தரப்பினருடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டுள்ளதற்கான ஆதாரங்கள் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது.

பிரகீத் எக்னெலிகொட படுகொலை விவகாரம் தொடர்பில் கேணல் தர அதிகாரியொருவர் உள்ளிட்ட ஆறு இராணுவப் புலனாய்வாளர்கள் தற்போதைக்கு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.(இ)


## 2ம் வருட நிறைவுதினம்

அமரர் பத்மாதேவி அச்சுதன்

அன்னை மடியில்
28.01.1953

சிவனடியில்
21.01.2014



மனிதருள் மாணிக்கமாய் புகழ் பூத்த
பெருந்தகையாய் பண்பு நிறைந்த
பேரொளியாய் அன்புடன் எம்மை
பேணிக்காத்து எம் வாழ்வின் ஒளி விளக்காய்
திகழ்ந்து எம்மை நல்லவழி நடாத்தி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அன்பு
வழிகாட்டி ஆதரவு தந்து இன்பமுடன்
வாழவைத்து இன்று வானுறையும்
தெய்வமாகி விட்ட எம் அன்புத் தாயின்
இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(3411)

531, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருற்று
ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
A.பகீரதன், A.கிரிதரன், A.கலைச்செல்வன்


## மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.இமையாணன் அ.த.க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி.நவமணி சந்திரசேகரம் கலந்து கொள்ளவுள்ளார் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(இ-5)


அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு

## பொது மக்களுக்கான அறிவிப்பு

## பொதுமக்களுக்கான மாவட்ட அமர்வுகள்: யாழ்ப்பாணம்

இருபது உறுப்பினர் கொண்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுவொன்று உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களைப் பெறுவது குழுவின் பணியாகும். அதன் பின்னர் அந்தச் சமர்ப்பணங்கள் மீதான அறிக்கையொன்றையும் அதன் சிபார்சுகளையும் இக்குழு தயாரித்து அவற்றை அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான அமைச்சரவை உப குழுவுக்குச் சமர்ப்பிக்கும்.

இந்த அமர்வுகளில் பொதுமக்கள் பங்குபற்றலாம். பொதுமக்கள் தங்கள் யோசனைகளை இந்தக் குழுவுக்குச் செய்வதற்கு அழைக்கப்படுகின்றனர். வாய்மூல யோசனைகளைச் செய்யும் போது தமது யோசனைகளின் சாராம்சத்துடன் கூடிய எழுத்துமூலமான பிரதியையும் வழங்குவது விரும்பத்தக்கதாகும்.

மேற்படி குழுவானது கீழ் காணப்படும் இடத்திலும், நேரத்திலும், தினத்திலும் பொதுமக்களுக்கான அமர்வுகளை நடாத்தவுள்ளதென்பதை அறியத் தருகின்றது.

இடம்:-கேட்போர்கூடம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
தினம்:- 15 & 16 மாசி 2016
நேரம்:-காலை 09.30-மாலை 04.30
மேலதிக விபரங்களைப்பெற கீழ் வருவனவாயிலாகத் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி:-011 243 7676
தொலைநகல்:-011 232 8780
மின்னஞ்சல்:-constitutionalreforms@gmail.com
வலைத்தளம்:-yourconstitution.lk
தபால்:- தவிசாளர்

(சி-3570)

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள்
யோசனைகள் குழு செயலகம்,
விசும்பாய, ஸ்ரேபிள்ஸ் வீதி,
கொழும்பு 02.



உ
சிவமயம்

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை



திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிக்கென சிலர் நிதி சேகரிக்க முயல்வதாகச் செய்தி கிடைத்திருக்கின்றது. ஆலயத் திருப்பணிக்கு நிதி சேகரிக்க எவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதனையும் அப்படி யாரும் நிதி சேகரிக்க முயற்சித்தால் எங்களின் கவனத்திற்குத் தந்துத வுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆலயத் திருப்பணிக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயக் கணக்கிற்கு "A/C PAYEE" காசோலை, காசுக்கட்டளை மூலமாக அல்லது நேரில் ஆலய அலுவலகத்தில் நன்கொடையைச் செலுத்தலாம்.

திருக்கேதீச்சர ஆலயத்
திருப்பணிச்சபை தொலைபேசி:-
023 205 0800, 023 323 0034,
011 258 5975

(சி-3558)

அ-திருநாவுக்கரசு
செ.இராகவன்
இணைச் செயலாளர்கள்


## இராசி பலன்

28.01.2016
(தை 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
சதுர்த்தி பிற்பகல் 12.20 மணிவரை
உத்தரம் பின்னிரவு 4.53 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
சண்டேஸ்வரர் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சதயம் காலை 8.40 இற்கு கன்-சந் | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி | செவ் | குரு சந் |

**மீனம்** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**இடபம்** மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக கடவுளை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள் குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்** குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

### பிரதமரின் அனுமதிக் கடிதத்துடன் சென்ற

# சனல் -4 ஊடகக் குழுவினருக்கு அனுமதி மறுத்த ராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதி கடிதத்தை கொண்டு சென்ற சனல்-4 ஊடகவியலாளர்களை பலாலி இராணுவத்தினர் உள்ளே அனுமதிக்கவில்லை. இதனால் அவர்கள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லாமல் திரும்பி வந்துள்ளனர்.

இரு தினங்களுக்கு முன்னர் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற ஃபேர்வேயின் காலி இலக்கிய விழாவினை முன்னிட்டு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த சனல்-4 ஊடகத்தின் குழுவினர், யாழில் உள்ள முகாம்கள் மற்றும் இடம்பெயர்ந்து நலன் புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று சந்தித்திருந்தனர்.

சனல்-4 ஊடகத்தின் ஊடகவியலாளர் ஜோன் ஸ்நொவ் உட்பட ஊடக குழுவினர் அனைவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதி பெற்றே இலங்கை வந்திருந்தனர்.

இவர்கள் அனைவரும் இலங்கையின் எப்பாகத்திற்கும் செல்ல முடியும் என ரணில் விக்கிரமிங்க விசேட அனுமதி ஒன்றினையும் வழாங்கியிருந்தார்.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு வந்து போருக்கு பின்னரான நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றனர். இந் நிலையில் நேற்றைய தினம் பலாலி ஊடாக மயிலிட்டி துறைமுகம் செல்ல முயன்ற சனல் -4 ஊடகவியலாளர்கள் உள்ளே செல்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.பொது நூலகத்தில் இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வில் நான்கு அமர்வுகள் நடைபெற்றன. காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வு ஆறு மணிவரை நடைபெற்றது.

24 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் இரண்டு மணியோடு முடிவடைந்திருந்தது.

மறுநாள் நிகழ்வின் போதே சனல்-4 ஊடகவியலாளர் உரையாற்றியிருந்தார். இந்நிகழ்வுகளின் ஏற்பாடுகள் மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்று இருந்தன. இலக்கிய விழா எனப்படும் இந்நிகழ்விற்கு உள்ளூர் கலைஞர்கள், அரசியல்வாதிகள் உட்பட எவருக்கும் அறிவிக்கப்படாமல் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுமிருந்தது.

நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சனல்-4 இன் ஊடகவியலாளர் ஜோன் ஸ்நொவ் பத்திரிகைத் துறையின் பொற்காலம் எனும் தலைப்பில் உரையாற்றியிருந்தார். யாழ்ப்பாணத்தில் இவ்விழா நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை ஏற்பாட்டாளர்களால் வெளிப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக போரின்போது இலங்கை அரசினதும், அதன் படைகளினதும் போர்க் குற்றங்களை சனல்-4 ஊடகம் ஆதாரத்துடன் வெளியிட்டிருந்தது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பிலான ஆதாரங்கள் மேலும் சனல்-4 ஊடகத்திடம் உள்ளதாக நம்பப்படும் நிலையில், இலங்கை அரசு அவ்வூடகத்தினை நிகழ்வொன்றிற்கு அழைத்துள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது. எனினும் சனல்-4 ஊடகம் தமிழ் மக்களின் நீதிக்காக என்றும் செயற்படும் என நம்பிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. (இ-4)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் அருள்மிகு பெரிய நாயகி சமேத பெரிய தம்பிரான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தின் சங்காபிஷேக நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ-5)

## மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் தலைவர் பு.தினேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் இலவச மருத்துவ முகாமில் இரத்த பரிசோதனை, கண் பரிசோதனை இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல் என்பன இடம்பெறுவதுடன் ஆயுள்வேத மருத்துவச் சிகிச்சைகளும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## மஹாகும்பாபிஷேகம்

தென்மராட்சி நுணாவில் மேற்கு ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன அட்ட பந்தன ஏககுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 6.36 தொடக்கம் 8.06 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற அருள் கூடியுள்ளது.

தொடர்ந்து 27 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகும் கிரியைகளைத் தொடர்ந்து 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறும்.

'வேதாகமகிரியா ஜோதி'" கிரியாதிலகம்"சிவஸ்ரீ தியாக. கிருஸ்ண மூர்த்திக்குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுரு தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.(இ-5-29)



யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்மடம் மணல்தெருலேன் பகுதியில் உள்ள மின்கம்பம் ஒன்று சரிந்து தென்னை மரத்துடன் சாய்ந்துள்ளதை படத்தில் காணலாம்.

## இரண்டு மாதங்களில் நாடுகளின் போர்க் கப்பல்கள் இலங்கை வரும்

(கொழும்பு)

கடந்த ஆறுமாத காலத்தில் சர்வதேச நாடுகளின் 25 போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் அடுத்த இரண்டு மாதகாலத்தில் மேலும் ஆறு போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளன.

இலங்கையின் வரலாற்றில் இவ்வாறான போர்க்கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருப்பது இதுவே முதற் தடவையாகும் என்று கடற்படை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கடற்படையின் அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலமாக இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பாதுகாப்பு போர்க்கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

குறிப்பாக கடந்த ஆண்டின் ஆறு மாத காலத்தில் இலங்கைக்கு சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 25 போர்க்கப்பல்கள் வருகை தந்துள்ளன.

இதில் ரஷ்யா. அவுஸ்திரேலியா. ஜப்பான். பங்களாதேஷ், ஓமான், இந்தியா, பாகிஸ்தான். கொரியா மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த போர்க்கப்பல்களே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளன.

அதேபோல் அடுத்த இரண்டு மாத காலத்தில் மேலும் ஆறு சர்வதேச போர்க்கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளன.

பிரித்தானியா, தென்னாபிரிக்கா, ஓமஏன், நைஜீரியா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த போர்க்கப்பல்களே இலங்கைக்கு வரவுள்ளன.

மேலும் இவ்வாறு இலங்கைக்கு வரும் போர்க்கப்பல்களுடன் இலங்கையின் கடற்படையினர் கூட்டு பயிற்சிகளை மேற்கொள்வதுடன் அந்தந்த நாடுகளுடன் தமது பாதுகாப்பு உறவையும் பலப்படுத்தும் வகையில் செயற்படுவர்.

அதேபோல். ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஒரு ஆண்டு காலத்தில் இவ்வாறு சர்வதேச நாடுகளின் அதிகளவான போர்க்கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருப்பது இதுவே முதற்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## உறுப்பினர்கள் தெரிவு

யாழ்ப்பாணம் வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபையின் பொதுச்சபைக் கூட்டமும் உறுப்பினர்கள் தெரிவும் அண்மையில் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் தலைவர் சமாதான நீதவான் லயன் பி.ஆர்.இரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சமாதான நீதவான் லயன் பீ.ஆர்.இரஞ்சன் தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக ரி.சுதந்திரபாலன், ஆர். இராசலிங்கம் ஆகியோரும் செயலாளராக பிரசித்த நொத்தாரிசு எஸ்.கே.கணேசவேல், உப செயலாளராக என்.ரி.எஸ்.சுபநாதன், பொருளாளராக க.தம்பிராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## பெறுபேறுகள்

யாழ். நெடுந்தீவு மகா வித்தியாலயம் கலைப்பிரிவு

வி.அமல அர்ஜீன் -பிசிஎஸ், கி.கிருஷாந்தன் - பி2எஸ். வி.ருத்திரன் - சி2எஸ், ஞா.அமலஜெலனி - 2சிஎஸ், ய.தேவகீர்த்தனா - ஏ2பி, அ.மேரி கீர்த்தனா - ஏசிஎஸ், ச.மேரி றஜிதா - 3பி, அ.சகாய ரம்மியா - சி2எஸ், ப.மதுசா - 2சிஎஸ், யே.மேரி வினு - ஏ2பி.

## தனிப்பட்ட வரி செலுத்துநர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று

கைதடி நாவற்குழிச் சந்தியில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரி செலுத்துவோர் கழகம் ஊடாக தனிப்பட்ட வரி செலுத்துநர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை அரியாலையில் உள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது வரி செலுத்துவோருக்கு அரச வங்கிகள் மூலம் கிடைக்கும் சலுகைகளை பெற்றுகொள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்.

எல்லா விதமான வரி தொடர்பான கேள்விகளுக்கும் அன்றைய தினம் விளக்கம் அளிக்கப்படும்.

எனவே தனிப்பட்ட வரி செலுத்துவோர் தவறாது கலந்து கொள்ளுமாறு உள்நாட்டு இறைவரி செலுத்துவோர் கழக வட மாகாண இணைப்பாளர் லயன் ரா.கிருபாகரன் அறிவித்துள்ளார். (இ-5)

## சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

வடமராட்சி தம்பசிட்டி மாயக்கை சித்தி விநாயகர் தேவஸ்தான நவோத்திர ஸ்ஹஸ்ர கலச சங்காபிஷேகமும் முதலாவது ஆண்டு மணவாளக் கோல விழாவும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.(இ-5-60)

# பஞ்சாங்க முரண்பாட்டிற்கு விடைகாண பல்கலைக்கழகம் முற்பட வேண்டும்

மனித வாழ்க்கையை முழுமையாக்குவதே இந்து மதத்தினுடைய நோக்கமாகும். அதற்கு ஆன்மீகத்தினையும், அறிவியலையும் தந்திருக்கின்றது எமது சமயம். எக்காலத்திலும் பொருத்தப்பாடுடையனவாகவே எமது இந்து சமயம் காணப்படுகின்றது. இந்துப் பண்பாட்டில் அறிவியலும் ஆன்மீகமும் காலம் தோறும் வளர்ச்சி கண்டு வந்திருக்கின்றன. இன்று எத்துறை சார்ந்த விடயத்திலும் மக்கள் ஈடுபட்டாலும் அதனை அறிவுபூர்வமாக சிந்தித்து செயலாற்றுவதைக் காணமுடிகின்றது. அதற்கு காலத்தின் தேவையும் அறிவின் வளர்ச்சியுமே காரணமாகும். ஆலய வழிபாட்டிலும் மக்கள் தமக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை தீர்ப்பதற்கு அறிவுபூர்வமாக வினாக்களை எழுப்புவதும் அனைவரிற்கும் தெரிந்த விடயம். மக்கள் தம் வாழ்வை மேம்படுத்த சாஸ்திரங்களையும் பயன் கொண்டு வருகின்றார்கள். சாஸ்திரங்களில் வானசாஸ்திரம் மிகப்பிரதானமான இடத்தினை பெறுகின்றது. அதிலும் சோதிடம் மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யமாக காணப்படுகின்றது. நவீனகாலம் வந்த போதும் சோதிடத்தில் எந்தளவிலும் மக்கள் நம்பிக்கை குறையவில்லை. இன்று எண் சோதிடத்திலும் அதிக ஆர்வம் காணப்படுகின்றது.

சோதிட சாஸ்திர சம்பிரதாயங்க்ளுக்கெல்லாம் ஆணிவேராகதிகழ்வது பஞ்சாங்கமாகும். வேதாகம புரணாதிகள் எல்லாம் வழி நூல்களாக இருந்த போதிலும் நேரகால விரதாதி நியமங்களை எல்லாம் எமக்கு தருவது பஞ்சாங்கமாகும். குருமார்களுக்கு பெருமையும் சிறப்பினையும் தருவதில் முதலிடம் தருவது பஞ்சாங்கமாகும். வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் எமது இருகண்கள் போன்று ஒன்றை ஒன்று விடுபடவும் தவிர்க்கவும் முடியாததாகவும் அமைந்துள்ளன. ஆனால் இவற்றுக்குள் உள்ள கால நேர வேறுபாடுகளால் இந்துக்கள் மத்தியில் விசனம் ஏற்பட்டு வருவதை காணமுடிகின்றது. இவ்விடயத்தில் குருமார்கள் தர்ம சங்கடத்திற்குள் ஆளாகி வருவதையும் காணமுடிகின்றது. நோயாளிக்கு மருந்து கொடுக்க வேண்டிய வைத்தியர்களாக திகழும் குருமார்கள் இவ்விடயத்தில் குருமார்களே நோயாளியாகி விட்ட நிலையில் இருக்கின்றார்கள். ஆனாலும் குருமார்களால்தான் தகுந்தால் போல் பஞ்சாங்க முரண்பாட்டிற்கு விடை கூறமுடியும். ஏனெனில் குருமார்கள் தான் பஞ்சாங்க கணிதர்களாக உள்ளார்கள். சோதிடர்களால் திருமணத்திற்கு பொருத்தம் பார்க்கும் பொழுது ஒரு பஞ்சாங்கத்தில் பொருத்தம் இல்லை எனில் மற்றைய பஞ்சாங்கத்தில் பொருத்தம் காணப்பட்டால் திருமணம் நடத்தலாம் என்கின்றார்கள். ஒரு பஞ்சாங்கத்தில் நல்லநாள் இல்லை எனில் மற்றைய பஞ்சாங்கத்தில் பார்த்து கொடுக்கப்படுகின்றது. ஒரு நேரத்தில் நல்லகாலமும் கூடாத கால்மும் இருப்பது உண்மைக்கு புறம்பானது. வாக்கிய பஞ்சாங்கத்தில் கணித்த ஜாதகருக்கு திருமணம் அல்லது காலகஷ்டம் ஏதாவது வந்து விட்டால் கணனி மூலமாக திருக்கணித முறைப்படி ஜாதகம் பார்த்துபலன் சொல்லுகின்றாகள். சைவத்தமிழ் மக்கள் வாழ்வில் சோதிடம் இணைந்தும் பல சந்தர்ப்பங்களில் வாழ்வையே நிர்ணயிக்கும் சக்தியாகவும் கூட சோதிடம் காணப்படும் பொழுது மக்கள் வாழ்வை அலட்சியப்படுத்துதல் முறையல்ல. எனவே பஞ்சாங்க முரண்பாடுகள் கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டியதாகும். பஞ்சாங்க முரண்பாடுகளுக்கு இன்றைய அறிவியல் காலகட்டத்தில் அடியார்களே உங்கள் உங்கள் குருமார்களும் ஆலயங்களும் பின்பற்றும் பஞ்சாங்கத்தின் படி பின்பற்றி நடவுங்கள் என சாதாரணமாக கூறுவது முறையான பதில் இல்லை.

பஞ்சாங்க முரண்பாட்டிற்கு பஞ்சாங்க கணிதர்கள் அவர்களுடன் ஆகம மற்றும் சோதிட ஆற்றல் உள்ள குருமார்கள். சோதிடர்களில் காலநிர்ணயம் செய்யக்கூடிய சோதிட நிபுணர்கள் பஞ்சாங்கம் இல்லாது சூரியஉதய அஸ்தமனத்தினை பார்த்து பலன் சொல்லக்கூடிய ஆற்றல் மிக்கவர்களும் கூட இருக்கின்றார்கள். அவர்களும் பஞ்சாங்க முரண்பாட்டினை தவிர்ப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும். இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக வானசாஸ்திர கல்வி முதலானவற்றினை ஆய்வு செய்பவர்கள், கற்பிப்பவர்கள் ஓர் ஆய்வினை அல்லது கலந்துரையாடலை ஏற்படுத்திக் கொடுத்து கல்வியுடன் நின்று விடாது சமூகம் பற்றியதான அக்கறை உடையவர்களாகவும் அக்கறை காட்டுதல் வேண்டும். கல்வியும் ஆய்வும் வெறுமனே பட்டத்திற்காக அமைதல் கூடாது. அவை வாழ்வின் வெற்றிக்காகவும் சமூக அமைதிக்காகவும் இருத்தல் அவசியம். எனவே பல்கலைக்கழகமும் இவ்விடயத்தில் அதிக அக்கறை எடுத்தல் வேண்டும்.

மக்கள் குருமார்களின் மீது நம்பிக்கை கொள்வதற்கும் சமயத்தின் மீது நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் குருமார்கள் சமயத்திலும் சமூகத்திலும் அக்கறை உடையவர்கள் என்பதையும் காட்டுவதும் குருமார்களுடைய கடமையாகும். எனவே மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டதனால் பஞ்சாங்க கணிதர்களும் குருமார்களும் பல்கலைக்கழகமும் இவ் விடயத்தில் அதிக அக்கறை எடுத்து சித்திரை வருடத்திற்கு முன்னர் 2016ஆம் ஆண்டில் ஏற்படும் முரண்பாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

ஞானபண்டிதர்




## வைத்தியசாலை வீதிக்கு மஞ்சள் கோடு இடுங்கள்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதியில் மஞ்சள் கோட்டுக் கடவை அமைத்துத் தருமாறு பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியின் முன்னர் அமைக்கப்பட்டிருந்த மஞ்சள் கோட்டுக் கடவையானது அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் பாதசாரிகள் வீதியைக் கடப்பதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

வாகன நெரிசல் அதிகமாக காணப்படுகின்ற மேற்படி வீதியில் மஞ்சள் கடவை அவசியம் என பாதசாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு வரும் வயோதிப நோயாளர்கள் தினமும் பல்வேறு சிரமங்களை வீதியைக் கடப்பதில் எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதியால் செல்லும் வாகனங்களும் இதனை பொருட்படுத்தாது வேகமாகவே செல்கின் றன.

வீதியைக் கடப்பதற்கு பாதசாரிகள் வீதியின் மறுபக்கத்தில் நின்றாலும் வாகனச் சாரதிகள் அதனைப் பொருட்படுத்துவது இல்லை.

சில சாரதிகளது அவதானக் குறைவால் இவ் வீதிக் கடவையில் விபத்துக்களும் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த வீதியில் பாதசாரிகளது நன்மைகருதி அழிவடைந்துள்ள மஞ்சள் கோட்டுக் கடவையை மீண்டும் அமைத்துத் தருமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (இ-5-60)

## மெய்வல்லுநர் போட்டி நாளை

யாழ்.கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கே.கிருஷ்ணகரன் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டு நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி ஜனசக்தி இன்சுரன்ஸ் முகாமையாளர் பி. கிரிதரன் மற்றும் கொடிகாமம் ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் அகிலன் கமலரஞ்சினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-60)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:31 1/4செவ் 2 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4028 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் சதயம்<br>கி.பா: 14செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: G/2041 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 40செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L கனடா குடியுரிமை<br>தொ.இ: B/4029 | பிறப்பு: 1987RC<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BFA, MA/ஆசிரியர்<br>தொ.இ: G/4143 |
| பிறப்பு: 1988RC<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 26செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: 9ஆம் தரம்/சொந்ததொழில்<br>தொ.இ: B/253 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4144 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/1214 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 70செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4146 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## 2013 தொடக்கம் 2015 இறுதி வரை

## கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில்

# 5,515 காணி அனுமதிப்பத்திரங்கள் கையளிப்பு

### பிரதேச செயலக புள்ளிவிபரத்தகவல்படி

(மல்லாவி)

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 2013 தொடக்கம் 2015 ஆம் ஆண்டுகளின் இறுதிவரை 5 ஆயிரத்து 515 காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

யுத்தம் நிறைவுற்று மீள்குடியேறிய மக்களுக்கு குறித்த காலப்பகுதியில் மட்டும் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இவ்வாறு காணி அனுமதி பத்திரங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு முதல் 2015-12-31 வரை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காணி ஆணையாளர் நாயகத்தின் 2013/1 சுற்று நிருபத்திற்கமைய குறித்த காணி அனுமதிப்பத்திரங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இவற்றுள் தீர்க்கப்பட்ட காணி பிணககுகள், தவறவிடப்பட்ட காணி ஆவணங்கள் என்பன உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவ்வருடத்தில் 27 கிராம சேவையாளர் பிரிவுகளில் காணிக்கச்சேரிகள் நடத்தப்பட்டு 2ஆயிரத்து 876 காணி அனுமதி பத்திரங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் அலுவலக புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

அத்துடன் ஆயிரத்து 671 பேரிடமிருந்து காணி உறுதி வரைபடம் பெற்று கொள்ளப்பட்டுள்ளதாகவும், விரைவில் அவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளதாகவும் அப்புள்ளி விபரம் மேலும் தெரிவிக்கின்றது. (2-15)




## கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளைச் சீர்செய்யுங்கள்

### பொன்னகர் வடக்கு மக்கள் வேண்டுகோள்

(பொன்னகர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் முடங்கிய நிலையில்காணப்படுவதாகவும் அதன் செயற்பாட்டை சீராக இயங்க வைக்க நிர்வாகத்தினர், கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் நடவடிக்கைஎடுக்க வேண்டுமெனவும் கிராமமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,


மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் இச்சங்கத்தைப் பொறுப்பேற்ற எந்தவொரு நிர்வாகமும் அதனைச் சரிவர இயங்கச் செய்ய முன்வரவில்லையென பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது இவ்வாறிருக்க கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகமும் அதே அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் சீரான முறையில் நிர்வாகப் பொதுக்கூட்டங்களை நடத்தாமை மற்றும் நடைமுறைப் படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான கணக்கறிக்கைகளை சமர்ப்பிக்காமை என்பவற்றுடன் பிரதேச செயலகம் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றினால் நடத்தப்படும் தேவை காண் கூட்டங்களில் பங்கேற்காமையென இந்நிர்வாகத்தின் செயற்பாடுகள் நீடிப்பதாகவும் அப்பகுதிமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் இக்கிராமத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், முன்னேற்றங்கள், மக்களுக்கு கிடைக்கின்ற உதவிகள் என்பன பெரும் பின்னடைவைச் சந்திப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மேற்படி சங்கத்தின் செயற்பாடுகளை சீரான முறையில் நிர்வகிக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-299)

## போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் மாணவர்களுக்கு கருத்தூட்டல் செயலமர்வு



(வற்றாப்பளை)

முல்லைத்தீவு மாவட்ட பெருந்தெருக்கள் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவுப் பொலிஸாரினால் மு/கலைமகள் வித்தியாலய கனிஷ்ட, உயர்தர வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கருத்தூட்டல் செயலமர்வு கடந்த 22ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் கல்லூரி அதிபர் க.கமலகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

கருத்தூட்டல் செயலமர்வு முல்லைத்தீவு மாவட்ட பெருந்தெருக்கள் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி சரத்குமார் ஜோசப், நிலைய பொறுப்பதிகாரி வயிர இந்திரஜீத் ஆகியோரின் நெறிப்படுத்தலில் போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரி டபிள்யூ.ஏ.பி. வெலகெதரவினால் முன்னெடுக்கப்பட்டது.

இக்கருத்தூட்டல் செயலமர்வில் போக்குவரத்து விதிமுறைகள், சட்டதிட்டங்கள் என்பனவற்றுடன் பாடசாலை போக்குவரத்து கண்காணிப்பாளர்களுக்கான அறிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

இதில் சுமார் 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று பயன் அடைந்தார்கள்.

இது போன்ற கருத்தூட்டல் செயலமர்வுகள் ஏனைய பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படுமென பெருந்தெருக்கள் போக்குவரத்து பொலிஸார் அறிவித்துள்ளனர். (2-310)

## முள்ளியவளை 4ம் வட்டாரத்தில் நாளாந்தம் கடிக்கும் குரங்குகள்

### தொல்லைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு முள்ளியவளை 4ஆம் வட்டாரப்பகுதியில் காட்டுக் குரங்குகளால் மக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இப்பகுதியில் நாளாந்தம் இவ்வாறு குரங்குக் கடிக்கு இலக்காகி மாஞ்சோலை வைத்தியசாலை சென்று சிகிச்சை பெற்று வருவதாகவும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை தடுக்க வனவள பாதுகாப்பு பிரிவினர் மற்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முள்ளியவளை தபால் நிலையத்தை அண்மித்த பகுதிகளிலேயே இக்குரங்குகளின் நடமாட்டமும் அட்டகாசமும் அதிகரித்து காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் இக்குரங்குகள் நாளாந்தம் மின்சாரக் கம்பிகளில் சிக்குண்டு விபத்துக்கள் இடம்பெறும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

எனவே குறித்த அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து காட்டுக் குரங்குகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது. (2-310)

## கமக்கார அமைப்புக்களின் மாவட்ட அதிகாரசபை தெரிவு

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் 'மாவட்ட அதிகார சபை' தெரிவு கடந்த 23ஆம் திகதி கிளிநொச்சி கமநல அபிவிருத்தித் திணைக்கள கேட்போர்கூட மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை நிலைய பிரதி ஆணையாளர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 8 கமநல சேவை நிலையங்களின் கமநல சேவைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது தலைவராக இ.ரவீந்திரகுமார், செயலாளராக ம.புவனேந்திரன், பொருளாளராக ஐ.அசோக்குமார், உப தலைவராக இ.செல்வராசா, உப செயலாளராக சி.பேரம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக அ.விக்கினராசா, ச.பாஸ்கரன், மா.நடராசா, அ.பொன்னுத்துரை ஆகியோர் தெரிவாகினர். (2-277)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திட்டங்களில் இளைஞர்கழக அங்கத்தவர்களுக்கு சந்தர்ப்பம்

### தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஊடாக ஏற்பாடு செய்யப்படும் சகல வெளிநாட்டு வேலைத் திட்டங்களிலும் இளைஞர் கழகங்களில் இணைந்து செயற்படும் இளைஞர்,யுவதிகளை பங்கு கொள்ளச் செய்யும் நோக்கத்துடன் நேர்முகப் பரீட்சையினை நடத்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலயம் தீர்மானித்துள்ளதாக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி கு.சறோஜா தெரிவித்துள்ளார்.

இதற்கான தகைமைகளாக,

இளைஞர் கழகத்தில் ஆகக்குறைந்தது 3 வருட செயற்பாட்டாளராக இருத்தல் வேண்டும்.2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகத்தில் விண்ணப்பதாரியாக இருத்தல் வேண்டும்.க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது ஆங்கில மொழி பேசக்கூடிய திறமையுடையவராக இருத்தல் வேணடும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலமாக இதற்கு முன்னர் வெளிநாட்டு பயணங்களில் பங்கு பற்றாதவராக இருத்தல் வேண்டும், வேறு தொண்டர் அமைபபுகளின நடவடிக்கைகளில் ஈடுபடல், கலாசாரம், விளையாட்டுத் திறமைகள் மற்றும் ஆற்றல்கள் ஆகிய தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப பரீட்சை நடத்தப்படும். மேலதிக விபரங்களுக்கு 021 206 0017, 077 617 8344 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (2-281)



கிளிநொச்சி உருத்திரபுரம் பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலயத்தில் கடந்த 22 ஆம் திகதி இரவு சப்பரத்திருவிழா நடைபெற்ற போது...

(படங்கள் சிவநகர் செய்தியாளர்)

## எப்போது செப்பனிடப்படும் உருத்திரபுரம் ஈழநாதம் வீதி

உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலில் அமைந்துள்ள அப்பூஜீ வீதி என அழைக்கப்படும் ஈழநாதம் ஒழுங்கை கடந்த மூன்று மாதங்களாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி ஒழுங்கை கழிவுநீர் தேங்கி நிற்பதாலும் புற்கள் உயரமாக வளர்ந்து காணப்படுவதாலும் பொதுமக்கள் அந்த வீதியைப் பயன்படுத்த முடியாது வேறு வழியாக தமது வீடுகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

சுமார் 30 இற்கும் அதிகமான குடும்பங்கள் அங்கு வசிக்கின்ற போதும் மேற்படி வீதியை பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

நீண்டகாலமாக திருத்தப்படாமையினால் 'இது வீதியா' என்று கேட்குமளவில் காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதியைச் செப்பனிட்டு தமது நாளாந்த வாழ்க்கை இடர்களை களைவதற்கு ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-3-307)

## மகாத்மா காந்தியின் 68ஆவது சிரார்த்த தினம்

மகாத்மா காந்தியின் 68 ஆவது சிரார்த்த தினம் எதிர் வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது மகாத்மா காந்தியின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்படும். அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள இயற்கை மருத்துவச் சங்கத்தின் இணைச் செயலாளர் மூ.சி.தேவதாஸ் காந்தி இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

இதேவேளை உருத்திரபுரம் காந்தி நிலைய உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (2-3-307)

# கிளிநொச்சி மாவட்டத்தின் நிலப்பரப்பை நூறு வீதம் பயன்படுத்துவதற்குத் திட்டம்

## அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் 50 வீதமான நிலப்பரப்புக்கள் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. அவற்றை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் 62 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பு இருந்தாலும் கூட 30 ஆயிரம் ஹெக்டேயர் அளவில் தான் விவசாயம் செய்யப்படுகிறது. அதில் 28 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பு நெற்பயிர் செய்கைகளுக்கு மிகுதியாக உள்ள 2 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் வேறு பயிர்ச்செய்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மிகுதியாக உள்ள நிலங்களில் அதிகளவானவை உவர் நீர் கலப்பு பிரதேசங்களாக உள்ளன. அவற்றை கடந்த வருடம் அதிகாரிகளூடாக அடையாளம் கண்டுள்ளோம். அவற்றை புனரமைப்பு செய்ய வேண்டிய தேவையுள்ளது. அதன் பின்னர் அந்த நிலங்களை விவசாய செய்கைக்கு பயன்படுத்த முடியும்.

மேலும் எமது பகுதியில் கால்நடைகளுக்கு என நிலம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் நிதிப் பற்றாக்குறை காரணமாக அதை சரியான முறையில் நடைமுறைப்படுத்த முடியாமலுள்ளது. அத்துடன் விவசாய நிலங்களில் குரங்குகளின் தொல்லை மிகுந்து காணப்படுகிறது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர். எனவே அவற்றைக்கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றோம்.


இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் மூலம் தற்போது இருப்பதை விட மிக கூடுதலாக 2 ஆயிரம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனத்துக்கு உட்படுத்தப்பட்டு நெற்பயிர்ச்செய்கை மற்றும் வேறு பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது. எமது மாவட்டத்தில் உணவு உற்பததியை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் மற்றும் திட்டங்களை கோரியுள்ளோம். அது தொடர்பாக திணைக்கள அதிகாரிகள் திட்டங்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

விரைவில் கிளிநொச்சி பகுதியில் பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. எனவே விவசாய உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதில் பிரச்சினை ஏற்படாது.

மாற்றுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு நல்ல உற்பத்தியை தரக்கூடிய பயிர்ச் செய்கைகளை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தி வருகின்றோம். விரைவில் பயன் தரக்கூடிய உற்பத்திகளை பெற்றுக்கொள்ள முடியும். எனவே எமது மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)




## மன்னார் கொள்ளைச் சம்பவம்; 7சந்தேக நபர்கள் கைதாகினர்



மன்னார் எழுத்தூர் கிராமத்திலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு கொள்ளையடிக்கப்பட்ட நகைகள், பணம் என்பவற்றையும் பொலிஸார் அவர்களிடம் இருந்து மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் எழுத்தூர் பகுதியிலுள்ள வீடொன்றினுள் அதிகாலை 1.30 மணியளவில் நுழைந்த கொள்ளையர்கள், அங்குள்ளவர்களை மிரட்டி கண்மூடித்தனமாகத் தாக்கி அவர்களை கட்டி வைத்து வீட்டில் இருந்த பணம், பெறுமதியான நகைகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றனர்.

இதனையடுத்து, உடனடியாக மன்னார் பொலிஸாருக்கு வீட்டின் உரிமையாளரினால் தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் பொலிஸார் தடயங்களை சாட்சியமாக வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற் கொண்டு வந்த பொலிஸ் குழுவினர் பிரதான சந்தேக நபர்கள் 3 பேரையும் அவர்களுக்கு உதவியதாக கூறப்படும் 4 பேர் உள்ளடங்கலாக மொத்தம் 7 பேரை கைது செய்துள்ளனர்.

பிரதான சந்தேகநபர்கள் 3 பேரும் எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, புத்தளம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேக நபரொருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் குறித்த நபரையும் மன்னார் பொலிஸார் தேடி வருவதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## கடற்றொழிலில் பாரிய அநீதிகள் தொடர்ந்தும் இழைக்கப்படுகின்றன

### முல்லை. மாவட்ட மீனவர் சமாசம் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்று முடிந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது கடற்றொழிலில் தங்களுக்கு பாரிய அநீதிகள் இழைக்கப்படுவதாக முல்லை. மாவட்ட மீனவ சமாசத்தினால் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தென்பகுதி மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு மத்திய மீன்பிடித்துறை அமைச்சரும் மற்றும் இராணுவத்தினரும் துணை நிற்கின்றனர். இதனால் இவ் அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்ந்து பெருகிக்கொண்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 75 வெளி மாவட்ட மீனவர்களுக்கு ஒரு வருடத்திற்கு மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டுமென மிரட்டல் மூலம் பணித்திருந்தனர்.

ஆனால் தற்போது ஐந்து வருடங்கள் தாண்டியும் மீன்பிடி நிறுத்தப்படவில்லை மாறாக மேலும் மேலும் வெளி மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென அண்மையில் மத்திய மீன்பிடித்துறை அமைச்சரினால் பணிக்கப்பட்டுள்ளமையானது மிகவும் கவலையைத்தருகின்றது.

இந்த நடவடிக்கைகள் தொடருமானால் யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான எங்களுடைய நிலைமை என்னவாகும். இவ்வாறு தென்பகுதி மீனவர்களுக்கு எங்கள் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்க முடியுமானால் எங்களுக்குத் தென்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்க முடியுமா? எனக் கேள்வியெழுப்பினர். இந்த அத்து மீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென வட மாகாண முதலமைச்சர், சிறுகைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினையை ஆராய்வதற்காக குழுவொன்றை அமைக்கவும் இப் பிரச்சினையை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (2-301)

## வடக்கின் மையமான மாங்குளத்தில் பொதுச் சந்தை அமைய வேண்டும்

### வடமாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

வடக்கு மாகாணத்தின் மையமாக மாங்குளத்தின் பொதுச்சந்தை அமைக்க வேணடுமென வடக்கு மாகாண சபையில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பிரேரணையை வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.வ.கமலேஸ்வரன் கொண்டு வந்திருந்தார். வடக்கு மாகாண சபையின் நாற்பத்து நான்காம் அமர்வு நேற்று முன்தினம் கைதடியிலமைந்துள்ள பேரவைச்செயலகத்தில் பேரவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே மேற்படி பிரேரணை கமலேஸ்வரனால் கொண்டுவரப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு மாகாணத்தின் மையமான மாங்குளத்தை வடக்கு மாகாண விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் மையமாக முன்னெடுக்க வேண்டும் விவசாயிகளின் முயற்சிக்கும் வியர்வைக்கும் உற்பத்திக்கும் உரிய விலை பொருட்களுக்கு கிடைப்பதில்லை.

விவசாயிகள் முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு உற்பத்திப் பொருட்களின் மையமாக தம்புள்ள செயற்படுவது போன்று வடக்கு மாகாணத்தின் மையமாக மாங்குளத்தில் சந்தை அமைவதன் மூலம் தெற்கிற்கும் வடக்கிற்குமான ஓர் இணைப்பு பாலமாக மாங்குளம் பிரதேசம் செயற்பட முடியும்.

தற்போதைக்கு புதிதாக நிர் மாணித்த மாங்குளம் சந் தையை முதலமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று பயன்படுத்த முடியுமென தனது பிரேரணையை கமலேஸ்வரன் முன்மொழிந்தார்.

இப்பிரேரணை அனைவரது ஆதரவுடன் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. (2-4)

## விசுவமடுவில் மோ.சைக்கிள் விபத்து இளைஞர்கள் காயம்; மாடு பலி



முல்லைத்தீவு விசுவமடு 12 ஆம்கட்டை பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் பயணித்துக் கொண்டிருந்த வேளை, வீதியின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத் திற்கு மாடு ஒன்று சென்றதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில விசுவமடு இளங்கோ புரத்தை சேர்ந்த எஸ்.காந்தரூபன் (வயது-22), எஸ். நளன்(வயது-20) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர். இதேவேளை குறித்த விபத்தில் மாடு ஒன்றும் பலியாகியுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன இவ் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை புதுக் குடியிருப்பு போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)

# போலித் தேரர்களுக்கு இடமளிக்க முடியாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஞானசார தேரரை விளக்கமறியலில் வைத்தது நீதித்துறையின் தீர்ப்பாகும். இதில் எமக்குத் தொடர்பு கிடையாது. நீதிமன்றத்தின் முன்பாக காவி உடையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உண்மையான பிக்குகளா? என்பது எமக்கு தெரியவில்லை. போலித் தேரர்களுக்கு அரசாங்கத்தினால் இடமளிக்க முடியாது பௌத்தர்கள் என்ற வகையில் இவ்விடயம் தொடர்பில் வெட்கித்தலைகுனிகிறோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.**

உடன்படிக்கைகளை மேற்கொண்டாலும் முதலீட்டு பொருளாதார ஆலோசனைகளை அரசாங்கம் பெற்றுக்கொண்டாலும் உள்நாட்டு நீதித்துறைக்குள் தலையீடு செய்வதற்கு வெளிநாடுகளுக்கோ வெளிநாட்டு நீதிமன்றங்களுக்கோ இடமளிக்கப் போவதில்லை என்றும் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அரசாங்கம் மேற்கொண்டுள்ள 12 நாடுகளுடனான முதலீட்டு உடன்படிக்கைகள் தொடர்பில் மகிந்த அணியின் பிரதானியான தினேஷ் குணவர்த்தனவினால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திடாததன் காரணமாக நாம் இலங்கையை பாதுகாத்து வருகின்றோம். எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை விடுத்தாரே ஒழிய நாம் ஒரு சந்தர்ப்பத்திலும் ஜெனிவா சென்று அவ்வாறானதொரு கோரிக்கையை விடுக்கவில்லை.

நாம் வெளிநாடுகளில் முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றோம். பொருளாதார ஆலோசனைகளை பெறுகின்றோம். அதேபோன்று நீதித்துறை சார் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றோம். எனினும் எமது நீதித்துறையின் இறைமைக்குள் வெளிநாடுகள் தலையீடு செய்வதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

உலக நாடுகள் தற்போது இலங்கையை ஏற்றுக் கொண்டுள்ளதோடு அழைப்புகளும் வருகின்றன. நாமும் உலகோடு கைகோர்த்து பயணித்தாலே அபிவிருத்திகளைக் காணமுடியும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பாரிய பிரச்சினை இருந்து வருகின்ற போதிலும் இந்தியப் பிரதமரும் பாக்.பிரதமரும் சிநேகபூர்வமான உறவினை பேணி வருகின்றனர்.

அதேபோன்று தான் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் பாரிய போட்டித்தன்மை ஒன்று நிலவி வருகின்ற போதிலும் ஆந்திர மாநிலத்தில் சீனாவுக்கு 10 ஆயிரம் ஏக்கர் காணியை இந்தியா வழங்கியிருக்கின்றது. இவ்வாறு தான் வெளிநாடுகளின் உறவுகள் பேணப்பட்டு வருகின்றன.

இன்று ஞானசார தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொடவின் மனைவியை மிரட்டிய குற்றத்துக்காகவே நீதிமன்றத்தினால் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஞானசார தேரர் விளக்கமறியலில்வைக்கப்பட்டமையானது நீதித்துறை விவகாரமாகும். இதற்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

ஞானசார தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதையடுத்து நீதிமன்ற வளாகத்தில் காவி உடையணிந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அது மாத்திரமின்றி நீதிமன்றத்துக்குள் அத்துமீறி நுழைவதற்கும் முற்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பௌத்தர்கள் என்ற வகையில நாம் வெட்கமடைகிறோம். அத்துடன் வேதனையும் அடைகிறோம்.


ஞானசார தேரரின் கைது விளக்கமறியலில் வைக்கப்பட்டமை தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை மாநாயக்கருக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன் போலித் தேரர்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளி க்க முடியாது என அவர் மேலும தெரிவித்தார். (இ)

## வெட்கித் தலைகுனிகின்றோம்









கலகொட அத்தே ஞானசார தேரரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து ஹோமாகம நீதிமன்ற வளாகத்தை அண்டிய பகுதிகளில் கடும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஞானசார தேரரை விளக்கமறியலுக்கு அழைத்துச் செல்ல சிறைச்சாலை பேருந்து வருகை தந்திருந்த நிலையில் அதனை வெளிச் செல்ல விடாமல் பௌத்த பிக்குகள் சிலர் அதன் அடியில் சக்கரங்களின் முன்பாக படுத்துக் கொண்டுள்ளனர்.

இன்னும் சில பிக்குமார் நதிமன்ற நுழைவாயில் மூடப்பட்டிருந்த நிலையில் மதில் வழியாக ஏறிக் குதித்து தங்களையும் கைது செய்யுமாறு நீதிமன்ற வளாகத்தில் பெரும் கூச்சல் இட்டுள்ளனர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பிக்கு ஒருவர் மயக்கமுற்றதைத் தொடர்ந்து பதற்ற நிலை தீவிரமடைந்துள்ளது. அவர் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதற்கிடையே பிக்குமாரின் ஆவேசம் கலந்த நடவடிக்கைகள் காரணமாக நேற்று முன்தினம் மதிய நேரத்துடன் ஹோமாகம நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் எந்தவொரு அசம்பாவிதத்தையும் எதிர்கொள்ளும் வகையில் அயல் பிரதேசங்களில் இருந்து 300 இறகும் அதிகமான பொலிஸார் நீதிமன்ற பாதுகாப்புக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் தண்ணீர் பீய்ச்சியடிக்கும் வண்டிகளுடன் கலகம் அடக்கும் பொலிஸாரும் ஸ்தலத்தில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை தேரர்களின் இந்த நடவடிக்கை குறித்து பிரதமர் ரணில் வெட்கித் தலைகுனிவதாக தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## அவன்கார்ட் நிறுவனம் கடற்படையினருக்கு 700 மில்லியன் ரூபா செலுத்த வேண்டும்

### பாதுகாப்புச் செயலாளர் தகவல்

அவன்கார்ட் நிறுவனம் இலங்கைக் கடற்படையினருக்கு 700 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியிருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட போது.

இலங்கைக் கடற்படையினரிடம் பெற்றுக்கொண்ட சேவைகளுக்காக இவ்வாறு அவன்கார்ட் நிறுவனம் பணம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு மேலதிகமாக அவன்கார்ட் நிறுவனத்திற்கு இலங்கைக் கடற்படையினர் எவ்வித பணத்தையும் செலுத்த வேண்டியதில்லை.

அவன்கார்ட் நிறுவனம் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

விசாரணைகள் பூர்த்தியாகும் முன்னதாக தீர்மானங்களை எடுக்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (இ)

# ஆரம்பக்கல்வி கற்றல், கற்பித்தலில் சிறுவர் நாடகத்தின் பங்கு



இலங்கையின் கல்வி முறையில் பாரிய பின்னடைவுகளும் குறைபாடுகளும் காணப்படுகின்றன என்பதனை பல்வேறு கல்வியியலாளர்களும் உளவியலாளர்களும் உணர்ந்து நவீன கல்விச் சீர்திருத்தத்தினை செய்து 1997இல் கம்பகா மாவட்டத்தில் பரீட்சித்து பின்னர் 1998 ஆம் ஆண்டு இலங்கையின் சகல பாகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்ட விடயம் யாவரும் அறிந்ததே. இந்த நவீன கற்றல் கற்பித்தற் செயற்பாட்டில் மாணவர்கள் கற்கின்றோம் என்ற உணர்வே இல்லாமல் மிகவும் துடிப்புள்ள ஆசிரியருக்கும் மாணவருக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தியதான மிகவும் மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் செயற்பாடு நடைபெற வேண்டும் என்பதே நவீன கல்வி சீர்திருத்தத்தின் அடிப்படை நோக்கமாகும். இன்றைய நவீன கல்வி சீர்திருத்தத்தின் படி ஆரம்பக்கல்விப் பாடத் திட்டம் ஒன்றிணைந்த பாடத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் முக்கியமான சுற்றாடல் சார் செயற்பாடுகள் முதல் மொழியான தமிழ்மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. இப்பாடங்களை மாணவர்களுக்கு கற்பிக்கின்ற போது மிகவும் மகிழ்ச்சிகரமான கற்றல் உணர்வே இல்லாமல் கலைத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ள எண்ணக்கருத்துக்களை மாணவர்களின் மனங்களில் பசுமரத்தாணிபோல ஊட்டி விடுவதற்கு இச் சிறுவர் நாடக உத்திகள் மிக இன்றியமையாதவை.

உதாரணமாக முதல் மொழியான தமிழ்மொழியை கற்பிக்கின்ற கதை கூறல் என்கிற எண்ணக்கருவினூடாக கேட்டல் திறன், பேச்சுத்திறன், வாசிப்புத்திறன், எழுத்துத் திறன் ஆகிய திறன்களோடு மனப்பாங்கினையும் சிறுவர் நாடகத்தினூடாக மாணவர்களுக்கு கொடுத்து விட முடியும். அதாவது கதையை மாணவர்களுக்கு ஆசிரியர் கூறுகின்ற போது கதையில் வருகின்ற அசைவுகளை மாணவர்களையும் செய்யபண்ணி ஆசிரியரும் செய்து காட்டி கூறுகின்ற போது மிகவும் மகிழ்ச்சியோடு தாமும் பங்கு கொண்டு தங்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர் பல்வேறு விலங்குகளாக நடித்துக்காட்டுகின்றார் என்கின்ற உணர்வோடு மிகவும் சிரத்தையோடு கதையினை ரசித்து செவிமடுப்பர்.

தொடர்ந்து கதையினை ஒவ்வொரு மாணவனுக்கும் பேசுவதற்கேற்ற சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்ற போது மாணவர்கள் சந்தோசமாக கூட்டாக இணைந்து ஒற்றுமையாக அங்க அசைவுகளோடு தெளிவான மொழி நடையுடன் சிறுவர் நாடகமாக நடித்துக் காட்டுவர். பின்னர் அவர்களது பயிற்சிக் கொப்பியில் கதையினை சுருக்கமாக எழுத விடுகின்ற போது அவற்றை தங்களுக்குத் தெரியும் தானே என்ற உணர்வோடு சந்தோசமாக எழுதுகிறார்கள். பின்னர் அவற்றை வாசிக்கச் சொல்லும் போது வாசிக்கிறார்கள்.

இது ஆசிரியனுக்கும் மிகவும் இலகுவாகவும் திருப்தியாகவும் இருக்கின்றது.

இத்தோடு மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற கூச்ச சுபாவம் அற்றுப் போகின்றது. கதையில் வரும் பாத்திரங்களில் குணவியல்புகளைச் சாதாரணமாக மனங்களில் பதித்துக் கொள்கிறார்கள்.

அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த படைப்பாளிகள் ஆவதற்கு துணை புரிகிறது. இது மட்டுமன்றி இம்முதல் மொழியினூடாக சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடத்தில் விலங்குகளின் குணவியல்புகள், அவற்றின் உணவுப் பழக்கவழக்கங்கள், அவற்றின் உடல் அமைப்புக்கள், அவை உணவைப் பெற்றுக்கொள்ளும் முறை என்பவற்றையெல்லாம் பெற்றுக் கொள்கிறார்கள்.

இதேபோல கணித பாடத்தில் கூட்டல் , கழித்தல் போன்ற எண்ணக்கருக்களையும் இச் சிறுவர் நாடகத்தின் ஊடாக மாணவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்று பல கல்வியியலாளர்கள் கூறுகின்றனர்.

சிறுவர்களுக்கு இயல்பாகவே பாத்திரமேற்கின்ற ஆடல், பாடல், விளையாட்டு, மகிழ்ச்சி, சுறுசுறுப்பு , குறும்புத்தனம், சுயாதீனமாய் இயங்கும் ஆர்வம், புதியவற்றை ஆராய்ந்து அறியும் ஊக்கம், தனித்துவமான பண்புகளின் கூட்டு வடிவமாக காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் சில பெற்றோர்களும் சில ஆசிரியர்களும் மறந்து விடுகின்றனர்.

உதாரணமாக துடியாட்டம் நிறைந்த மாணவர்களை குழப்படிக்காரன் என்று பெற்றோர்களும் சில ஆசிரியர்களும் வெறுக்கின்றனர். அவனது ஆளுமைகளை மழுங்கடிக்கிறார்கள். மாறாக சோர்ந்து போய் மூலையில் அமர்ந்து அமைதியாக இருப்பவர்கள் குழப்படி இல்லாத நல்ல பிள்ளைகள் என்கிறார்கள். ஆனால்



கல்வித் தரிசனம்

அதுவல்ல உண்மை நிலை. துடிப்புள்ள சிறுவர்களை அவனிடம் இருக்கும் ஆளுமைகளோடு சேர்த்து இன்னும் அவனுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி தூண்டி விடுகின்ற போது அவன் சாதனை மிக்க மனிதனாக உருவெடுக்கின்றான். இவ்விடயத்தினை இன்று எத்தனை பெற்றோர்களும் ஆசிரியர்களும் அறிந்திருக்கிறார்கள் என்கின்ற வினா பல கல்வியியலாளர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றது. ஏனெனில் வகுப்பறையில் துருவித் துருவி ஏன்? எதற்கு? என்கின்ற வினாக்களைக் கேட்டு ஆராய்கின்ற மாணவர்களை சில ஆசிரியர்கள் வெருட்டி அடித்து வகுப்பைக் குழப்பாமல் கதிரையில் இரு என்கிறார்கள்.

இது ஆசிரியர்களில் மட்டும் பிழையல்ல. அவ்வாசிரியருக்கு ஆரம்பக் கல்வியில் சிறப்பான பயிற்சியில்லாமல் வகுப்பறையில் கற்பிக்கின்ற போது அப்பிரச்சினை எழத்தான் செய்கின்றது. இதற்கான பொறுப்பினை கல்வித் திணைக்களம் ஏற்கத்தான் வேண்டும். ஏனெனில் சிறுவர் அரங்கிற்கான பயிற்சிகள் கல்வித் திணைக்களத்தால் போதிய அளவிற்கு நடத்தப்படுவதில்லை.

சிறுவர் அரங்கிற்கான ஆசிரிய ஆலோசகர்கள் கல்வித் திணைக்களங்களில் போதியளவு இல்லை. இதனால் இத்துறையை பாடசாலைகளில் வளர்க்க முடிவதில்லை.

சிறுவர் அரங்கிற்கான தொடர் பயிற்சிகளை பெறுவதற்கான களங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. பாடசாலைக்கு வெளியில் தனியார் நிறுவனங்களிலும் இதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு.

ஆசிரியர்கள் சிறுவர்கள் பார்ப்பதற்கு ஏற்றதான சிறுவர் நாடக மேடையேற்றங்கள் பாடசாலைச் சூழலில் போதியளவு நடைபெறுவதில்லை. இதனால் பார்த்துக் கற்றுக் கொள்ள முடிவதில்லை.

இவ்வாறான போதாமைகளை நிவர்த்தி செய்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு இது சம்பந்தமான செயலமர்வுகளை ஆசிரியர்களுக்கு வழங்கினால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தி கல்வியில் சிறந்த பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இன்று நாம் இடைநிலை வகுப்புக்களில் பல்வேறு இடர்பாடுள்ள மாணவர்களைக் காண்கின்றோம். இந்த இடர்பாடுகளுக்கு ஆரம்பக் கல்வியில் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலில் ஏற்பட்ட இடர்பாடும் ஏனைய போர்ச் சூழல் போன்ற காரணங்களை கூறலாம். ஆனாலும் அவற்றையெல்லாம் வென்றெடுக்கும் சக்தி இச்சிறுவர் நாடகங்களுக்கு உண்டு. ஏனெனில் மண் விளையாட்டு முதல் கோயில் வழிபாடுகளைச் சார்ந்த விளையாட்டுக்கள் வரை யாவற்றிலும் பிள்ளை தான் கண்டதையே திரும்பச் செய்து பார்க்கிறது. வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் எனும் முதுமொழியின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். இந்த விளையாட்டுக்கள் மூலம் பிள்ளை உலகை ஆராய்கிறது, அறிய முற்படுகிறது. பிள்ளைகள் வாழுகின்ற சூழலில் நல்ல ஆரோக்கியமான நிகழ்வுகளை பாவனை செய்யும் பிள்ளைகளது விளையாட்டுக்களும் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கான விளையாட்டுக்களாக அமையும் மாணவர் சமூகத்தில் விளையாடுகின்ற எந்த விளையாட்டிலும் வாழ்க்கையின் அர்த்தம் பொதிந்து கிடக்கிறது என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. இவ் வாழ்க்கையின் அர்த்தத்தையும் கல்வியின் மகத்துவத்தையும் பொதிந்து வைத்திருக்கின்ற இவ் விளையாட்டுக்களை விளையாடுகின்ற போது அங்கே நாடகத்தின் பண்புகளாக பாத்திரமேற்றல், சேர்ந்து செய்தல், இலட்சியத்தை நோக்கி நகர்தல் என்கின்ற பண்புகள் வளர்க்கப்படுகின்றன.

இவ்வாறான சிறப்புமிக்க சிறுவர் நாடகத்தினூடாக மாணவர்கள் மத்தியில் கற்பனை விரிவதற்கு கூட்டிணைவுச் செயற்பாட்டிற்கு மகிழ்ந்து கற்பதற்கு கட்புல தரிசனத்துடன் கூடிய கிரகித்தலுக்கு கண்களுக்கும் காதுகளுக்குமான இனிப்பான வழங்கலுக்கு உடலை ஊடறுத்து உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியைக் கிளறுவதற்கு இச்சிறுவர் அரங்கு உதவுகிறது. இச் சிறுவர் அரங்கு சிறுவர்களை ஆளுமைமிக்கவர்களாக உருவாக்கி விடுகிறது.

எனவே இவ் ஆளுமைமிக்க அரங்கைப் பயன்படுத்தி பச்சிளம் சிறுவர்களுக்கு கற்கின்றோம் என்ற உணர்வே இல்லாமல் மூளையின் செயற்பாட்டு வேகத்தை அதிகரிப்பதற்கும் எண்ணக்கருக்களின் வலைப் பின்னல் அமைப்பினை வேகமாக இயக்குவதற்கும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் சிறுவர் அரங்கின் உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களை மகிழ்ச்சிகரமாக கற்பதற்குத் தூண்டுகின்ற கருவியான சிறுவர் அரங்கைப் பயன்படுத்தி மாணவர்களின் எதிர்கால ஒளிமயமான வாழ்க்கைக்கு துணை புரிவோமாக.

ஆசிரியர் பி.விஜிந்தன்
யாழ்.மானிப்பாய்
சென். ஆன்ஸ் றோ.க.
த.க.பாடசாலை



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் 2002 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பு பழைய மாணவர்களால் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயிலை யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியனால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் 1999 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) படித்த மற்றும் 2002 ஆம் ஆண்டு அப் பாடசாலையில் உயர்தரம் படித்த பழைய மாணவர்களால் 25 இலட்சம் ரூபாய் செலவில் பாடசாலைக்கு நுழைவாயில் அமைக்கப்பட்டது. நுழைவாயில், பிரதான வாயிலில் நிழற் குடை, சீ.சீ.டிவி கமரா என்பவற்றுடன் கூடியதாக இது அமைக்கப்பெற்றுள்ளது.இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, கிளிநொச்சி மாவட்ட நீதிபதியும் பாடசாலையின் பழைய மாணவனுமாகிய ரி.பிரபாகரன், மாவட்ட அரச அதிபர் எம்.வி.ரோஹண புஸ்பகுமார, பொலிஸ் அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:குருமன்காடு செய்தியாளர்)


# மாணவர்கள் செருப்புடன் பாடசாலை செல்லும் நிலைமை மாற வேண்டும்

## வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க பிரதிநிதி தெரிவிப்பு

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 2 ஆம்கட்டமாக துவிச்சக்கர வண்டிகள்,பாடசாலை புத்தகப்பைகள் மற்றும் காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் வலயக்கல்வி பணிமனை விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் நேற்றுக்காலை 2ஆம் கட்டமாக துணுக்காய் வலயக்கல்வி பணிமனையில் வலயக் கல்வி பணிப்பாளர் தலைமையில் தாய், தந்தையயை இழந்த பிள்ளைகள, பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் பிள்ளைகள் என அவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக சுமார் ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபா பெறுமதியான 8 துவிச்சக் கரவண்டிகள், 60 புத்தகப்பைகள், 44 காலணிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் உரையாற்றிய வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க பிரதிநிதி நவீந்திரன் துணுக்காய் கல்வி வலய பாடசாலை மாணவர்களில் தாய், தந்தையரை இழந்த மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பிள்ளைகள் என சுமார் 600 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் புத்தகப்பைகள் இல்லாது பொலிதீன் பைகளில் கொப்பி, புத்தகங்களை எடுத்து வருகின்றனர். இதனுடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் காலணிகள் இல்லாது தற்போதைய கல்வி கட்டமைப்பிலும் செருப்புடனும் மாணவர்கள் வருகின்ற அவலநிலைமை இன்றும் எமது சமூகங்களில் தொடர்ந்த வண்ணம் உள்ளன. பாதிக்கப்பட்ட எமது பிள்ளைகளின் கல்விக்காக அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான வழியினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதற்கான தார்மீக பொறுப்பும் எமது தமிழ் சமூகங்களுக்கு இருக்கின்றது என்பதனை மறந்திட முடியாது எனவும் தெரிவித்தார். (2-15)



# அரசியல் ஆய்வரங்கு

கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஏ-9 வீதியிலுள்ள கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக உள்ள கருணாநிலையை கேட்போர் கூடத்தில் புதிய அரசியல் உருவாக்கம் தொடர்பான ஆய்வரங்கம் இடம்பெறும்.

இதில் பேராசியர் சி.சிவசேகரம் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பில் சிறப்புரையாற்றுவார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்.

இந்த ஆய்வரங்கில் ஆர்வமுள்ள அனைவரும்கலந்து கொள்ள முடியும்.

நாட்டில் தற்போது புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் பெறவுள்ள இச் சூழலில் தமிழ் மக்கள் அது தொடர்பில் விழிப்புணர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (2-254)

# என்.டி.பி.வங்கியின் நாலாவது கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் என்.டிபி (NDB) வங்கியின் 4 ஆவது கிளை நேற்றைய தினம் மானிப்பாயில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இத் திறப்பு விழா நிகழ்வில் (NDB) வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்து கொள்வதற்கும், மக்களின் உழைப்புக்கள் அவர்களின் வளர்ச்சிக்கே பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இவ் வங்கி சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.

சிறு வியாபாரம், கல்வி, விவசாயம், வீட்டுத்திட்டம் போன்ற பல்வேறு தரப்பட்ட தேவைகளுக்காக நாம் மக்களுக்கு எமது சேவையை வழங்கி வருகின்றோம்.







கூடுதலாக விவசாயத்துறையில் உள்ள மக்களுக்கு கூடியளவு சேவையினை எம்மால் வழங்கக் கூடியதாகவுள்ளது என்பதில் பெருமையடைகின்றோம்.

அபிவிருத்தி என்பது மக்களூடாகத்தான் நடைபெற்று வருகின்றது. எனவே மக்களுக்கு பாதுகாப்பாகவும் அவர்களுக்கு நம்பிக்கைக் குரியதுமான சேவைகளை தொடர்ந்து செய்வதே எமது நோக்கமாகும். அடுத்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் எமது வங்கியின் 10 கிளைகளை ஆரம்பிப்பதில் உறுதியாகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் என்.டி.பி.(NDB) வலையமைப்பு முகாமைத்துவ துணைத் தலைவர் சஞ்சய பெரேரா, வங்கி அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)







விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மூலம் உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் நடைபயணம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.நகர் பகுதியில் நடைபெற்றது. சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நடைபயணம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஆரம்பித்து யாழ். நகர் பகுதியை சுற்றி யாழ். மத்திய கல்லூரியில் முடிவடைந்தது. இந்த நடை பயணத்தில் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள் பொ.சோபிகா)


# பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பம்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஊடாக யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கல்லூரியில பல்வேறு வகையான பயிற்சி நெறி கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப் பயிற்சி நெறிக்கான கட்டணமாக ரூபா 60 ஆயிரம் அறவிடப்பட வேண்டும். சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கு இக் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொழில் வாய்ப் பினை எதிர்பார்த்து காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பினை புதிய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத் தர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் 14.01.2016 ஆம் திகதிய வர்த்தமானியினூடாக கோரப்பட்டுள்ளன.

இரண்டிற்குமான முடிவுத் திகதியாக 05.02.2016 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஹிலாரிக்கு ஒபாமா ஆதரவு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக ஹிலாரி கிளின்டனை முன்னிறுத்த தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பரில் நடைபெற உள்ளது. இதையொட்டி ஆளும் ஜனநாயக கட்சி, எதிர்க்கட்சியான குடியரசு கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்க பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுக்க இரு கட்சிகளிலும் விரைவில் உட்கட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது.

ஜனநாயக கட்சி தரப்பில் 15 பேர் வேட்பாளராக போட்டி யிடுகின்றனர். அவர்களில் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் முன்னணியில் உள்ளார்.


இந்நிலையில் ஹிலாரியை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது.

ஹிலாரி திறமையானவர். தேசப்பற்று மிக்கவர், மிக நீண்ட காலமாக அரசியலில் இருக்கிறார். மிகுந்த அனுபவம் மிக்கவர். அவரால் மிகத் திறமையாக ஆட்சி நடத்த முடியும். அவர் பெண் என்பதற்காக கட்சியினர் ஆதரவு தெரிவிக்கவில்லை.

அவரது திறமையை முன்னிறுத்தியே பெரும்பாலானோர் ஆதரித்து வருகின்றனர். அரசியலில் பெண்கள் அதிக அளவில் ஈடுபட வேண்டும். எனது மகள்களுக்கும் இதையே போதிக்கிறேன்.

எனது ஆட்சிக்குப் பிறகு ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவரே அமெரிக்க ஜனாதிபதியாக வேண்டும்என்று விரும்புகிறேன் என அவர் தெரிவித்தார்.



அமெரிக்காவில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில் ஹிலாரி கிளின்டனுக்கு ஜனாதிபதி ஒபாமா முதல்முறையாக ஆதரவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமெரிக்காவின் லாவா நகரில் நடைபெற்ற கூட்டத்தில் ஹிலாரி கூறியதாவது.

ஒபாமாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவரது அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக திறம்பட பணியாற்றியுள்ளேன். எனது திறமையை அவர் அங்கீகரித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று அவர் தெரிவித்தார். (இ)

# மலேசியாவில் கரையொதுங்கிய 13சடலங்கள் பொலிஸாரால் மீட்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் தெற்கு மாநிலமான ஜோகூரில் உள்ள பந்தார் பெனாவர் கடற்கரையோரம் நேற்று முன்தினம் காலை 13 பேரின் உடல்கள் கரை ஒதுங்கி கிடந்தன. இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார பலியானவர்களின் உடல்களை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

இறந்தவர்களின் உடைமைகளில். இருந்து இந்தோனேஷிய நாட்டின் அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டன. எனவே, இவர்கள் அனைவரும் இந்தோனேஷியாவில இருந்து சட்டவிரோதமான முறையில் மலேசியாவில் நுழைவதற்காக படகு மூலம் பயணம் செய்து இருக்கலாம் என்றும், அப்போது படகு பலத்த கடல் அலையில் சிக்கி கவிழ்ந்து இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இந்த படகில் மொத்தம் 35 பேர் வரை பயணம் செய்திருப்பதையும் மலேசியா பொலிஸார் உறுதி செய்தனர். இதைத்தொடர்ந்து படகு எங்கு கவிழ்ந்தது, படகில் பயணம் செய்த மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்து மலேசிய பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

# மயக்க மருந்து கொடுத்து 10பொலிஸார் படுகொலை

## பொலிஸ் தீவிரவாதி திட்டமிட்டுச் சதி

ஆப்கானிஸ்தானின் உருஸ் கான்மாகாணத்தில்உள்ள சினார்டோ நகரில் எல்லைப் புற சோதனைச் சாவடி உள்ளது. அங்கு 11 பொலிஸ்காரர்கள் பணியாற்றி வந்தனர். இவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் தன்னுடன் பணியில் இருந்த சக பொலிஸ்காரர்கள் அனைவருக்கும் மயக்க மருந்து கொடுத்துள்ளார்.

அவர்கள் மயங்கிய நிலையில் கிடந்தபோது துப்பாக்கியால் அத்தனை பேரையும் சுட்டுத் தள்ளினார். இதில் 10 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸ்காரர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

இந்த சம்பவம் குறித்து உருஸ் கான் மாகாண பொலிஸ் தலைவர் ரகிமுல்லா கான் கூறுகையில், "எங்களுடைய விசாரணையில் பொலிஸாரை சுட்டுக்கொன்ற பொலிஸ்காரர்கள் தலிபான் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது. இவர், பொலிஸ பணியில் இணைந்து தலிபான்களுக்கு இரகசியமாக உதவி செய்து வந்துள்ளார். பொலிஸ்காரர்களை கொன்றுவிட்டு தப்பிச் சென்றவரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டு உள்ளது" என்றார்.

கடந்த ஒரு வாரத்தில் உருஸ் கான் மாகாணத்தில் இதுபோல் நடந்த 2 ஆவது சம்பவம் இதுவாகும்.

கடந்த 17ஆம் திகதி 9 பொலிஸாரை அவர்களுடன் ஊடுருவி செயற்பட்டு வந்த 4 தலிபான் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# போலிக் கடவுச்சீட்டு தயாரிப்புக்கென தொழிற்சாலை வைத்திருக்கும் ஐ.எஸ்



ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களுக்கு தேவையான போலிக்கடவுச் சீட்டுகளை தயாரிப்பதற்காக தனி தொழிற்சாலைகளை அமைத்திருபபதாக பிரான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிரியா, ஈராக், லிபியா உள்ளிட்ட நாடுகளில் பெரும்பகுதியை கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்போது போலிக்கடவுச்சீட்டு தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரான்ஸ்உள்துறை அமைச்சர் Bernard Cazeneuve கூறியதாவது, ஈராக், சிரியா, லிபியா போன்ற நாடுகளில் இருந்து திருடிய பத்திரங்கள் மூலம் ஐ.எஸ். தீவிரவாதிகள் போலிக்கடவுச்சீட்டுகளை தயாரிக்க தனி தொழிற்சாலை அமைத்திருக்கலாம்.

ஐ.எஸ். அமைப்பினர் கடவுச்சீட்டு தயாரிக்கும் இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பாரீஸ் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் குறைந்தது இரண்டு பேராவது போலி சிரிய கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி அகதிகள் போன்று ஐரோப்பாவுக்குள் நுழைந்திருக்கலாம்.

எனவே. சிறப்புப்படை ஒன்றை கிரீஸ் நாட்டுக்கு அனுப்பி இந்த போலிக்கடவுச்சீட்டுகளை அகற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.

Raqqa மற்றும் Deirez Zour போன்ற பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி 17 மாதங்களுக்கும் மேல் உள்ளது.

இதனால் இப்பகுதியில் இருக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகள் அச்சடித்து தரும் போலிக்கடவுச்சீட்டு மூலம் ஒருவர் மற்ற நாடுகளுக்கு செல்ல வாய்ப்பு உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் ஐ.எஸ். தீவிரவாதிகள் போலிக்கடவுச்சீட்டு தயாரிப்பதற்கான அதிகாரபூர்வ ஆதரங்கள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தனிச்சிறையில் தீவிரவாதிகள்

தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் ஒரு பகுதியாக சிறையில் உள்ள தீவிரவாதிகளை தனி அறைகளில் அடைக்க பிரான்ஸ அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் தீவிரவாதிகள் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்ற நிலை இருப்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகளை அந்நாட்டு அரசாங்கம் தீவரமாக மேற்கொண்டு வருகிறது.

மேலும் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் திட்டம் தீட்டி வருகிறது. இதன் ஒரு பகுதியாக. தீவிரவாதிகள் என குற்றஞ்சாட்டப்படடு சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை தனி சிறையில் அடைக்க பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தீவிரவாதிகள் ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொள்ள முடியாமல் போகும்.


தீவிரவாதிகள் சந்தித்து கொள்ளவும் திட்டம் தீட்டவும் தங்கள் இயக்கத்துக்கு ஆள் சேர்க்கவும் சிறைச்சாலைகளை பயன்படுத்திக் கொள்வதால் இந்த திட்டத்தை பிரான்ஸ் முன்னெடுத்துள்ளது. இதன் ஒரு பகுதியாக Osny மற்றும் Annoeulin பகுதிகளில் உள்ள இரண்டு சிறைச்சாலை களில் பரத்தியேக அறைகள் அமைக் கப்பட்டுள்ளன.

மார்சுமாதஇறுதிக்குள்இதேபோன்று 5 தனி சிறைச்சாலைகளை உருவாக்க பிரான்ஸ் திட்ட மிட்டுள்ளது. ஒவ்வொரு சிறைச்சாலையிலும் 20 தீவிரவாதிகள் வரை அடைக்க முடியும்.

மேலும், இளம் வயது தீவிர வாதகளை கண்டுபிடிப்பதற்கு ஆசிரியர்களை பிரித்தானியா பயன்படுத்தி வருகிறது. இதே திட்டத்தை தாங்களும் பின்பற்றலாம் என்று பிரான்ஸ் முடிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ)

# செவ்வாயில் கண்டுபிடிக்கப்பட்ட கடல் உயிரினம் 52 ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்ததா?





செவ்வாய் கிரகத்தில் வரலாற்றுக்கு முந்தைய கடல் உயிரினப் படிமங்கள் இருப்பதை புகைப்படம் எடுத்து நாசா வெளியிட்டுள்ளது.

செவ்வாய்க்கிரகம் பற்றி ஆராய்ச்சி செய்துவரும் நாசாவின் கியூரியோ சிட்டி ரோவர் விண்கலம், அவ்வப்போது வியப்பூட்டும் தகவல்களை வெளியிட்டு வருகிறது.

இதில் மேலும். ஒரு ஆச்சரியமூட்டும் கண்டுபிடிப்பாக. பூமியில் 52 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கடல் உயிரினம் இருப்பதை புகைப் படம்எடுத்து நாசா வெளியிட்டுள் ளது.

அந்த புகைப்படத்தில். முட்டை வடிவிலான (Oval Shape) இரண்டு கற்கள் இருக்கிறது. அதன் தோற்றத்தை பார்க்கையில். Triloytes (படிமங்கள் வகை உயிரினத்தை சேர்ந்தது - Fossils) என்ற விலங்கினம் போன்று இருப்பதாக ஆய்வாள்ர்கள் தெரிவித்துள்ளனர்.

2 Triloytes படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, இந்த Triloytes உயிரினம் பல்வேறு வாழ்க்கை முறையை கொண்டுள்ளது. ஒட்டுண்ணி போன்று பிற உயிரினத்தை சுரண்டி வாழ்வது. கடலுக் கடியில் வசிப்பது போன்றவை அடங்கும். (இ)

# 3 மாதங்களுக்குள் சகலருக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை

இலங்கையில் அனைத்து தரப்பினருக்கும் அடுத்த மூன்று மாதங்களுக்குள் மின்சாரம் வழங்கப்படும். கையில் பணம் இல்லாவிட்டாலும் மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவோம். இதற்காக ஆரம்பத்தில் எந்தக் கட்டணமும் அறவிட மாட்டோம் என மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா உறுதியளித்தார்.

அத்துடன், சம்பூர் அனல்மின் நிலையத் திட்டம் நிபந்தனைகளுடன் முன்னெடுக்கப்படும் என்றும், சூரிய சக்தி காற்றலையூடாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 12 நாடுகளுடனான உடன்படிக்கைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே நேற்று அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"நுரைச்சோலை அனல்மின் நிலைய திட்டத்தில் சீனா தவறிழைக்க வில்லை. சீனாவுடன் உடன்படிக்கை செய்துகொண்ட ராஜபக்ஷ அரச தரப்பினர்தான் தவறிழைத்துள்ளனர்.

இந்த உடன்படிக்கை விடயத்தில் தவறிழைத்த சீன அதிகாரியை அந்த நாட்டு அரசு தண்டித்துள்ளது. ஆனால், எமது நாட்டில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தண்டனை வழங்கப்படவில்லை. இந்த விடயத்தில் அரசு பின்னணியிலேயே உள்ளது. இது இவ்வாறிருக்க, சம்பூர் அனல் மின்நிலையத் திட்டத்தை நாம் நிபந்தனைகளுடன் முன்னெடுப்போம். இதனூடாக நமக்குத் தேவையான மின்சக்தியைப் பெற்றுக்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 27.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.98 | 146.02 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.83 | 210.07 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.15 | 159.31 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.57 | 144.40 |
| டொலர் | கனடா | 99.87 | 103.96 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.84 | 103.56 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.13 | 102.95 |
| ரூபா | இந்தியா | 2.1212 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.9497 |
| குவைத் | டினார் | 473.5560 |
| ஓமான் | ரியால் | 373.6917 |
| கட்டார் | ரியால் | 39.5145 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3589 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1745 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 140 | 140 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 55 | 70 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 270 | 350 | 400 | 400 |
| தக்காளி | 80 | 60 | 60 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 100 | 100 | 120 | 100 |
| கரட் | 150 | 200 | 150 | 180-360 | 200 | 180 |
| பூசணி | 50 | 60 | 45 | 60 | 80 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 50 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 100 | 200 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 90 | 100 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 90 | 90 | 120 | 150 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 | 160 | 100 |
| பீற்றூட் | 100 | 110 | 140 | 100 | 160 | 150 |
| கறிமிளகாய் | 250 | 400 | 170 | 250 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 800 | — | — | — | — | — |
| போஞ்சி | 100 | 120 | 100 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 120 | — | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 35 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 100 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 120 | 100 | 150 | 160 |
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 20 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 |
| ஈரப்பலா | 30 | 50 | 50 | — | 80 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கோவிலில் சாமி கும்பிட்ட தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் சுட்டது 90

...இந்தத் தாக்குதலில் ஒரு இராணுவ அதிகாரியும் ஒரு சிங்கள சிப்பாயும் 8 தமிழ்ப் போராளிகளும் உயிரிழந்ததாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

ஆனால், இலங்கை இராணுவத்துக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டதாகவும் 100 இற்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர் பலியானதாகவும் டெலோ இயக்கம் அறிவித்தது.

### இராணுவ டாங்கிகள்

தமிழ்ப்போராளிகளும் விடுதலைப்புலிகளும் தாக்குதல் நடத்தி இலங்கை இராணுவத்துக்குக் கடும் சேதத்தை உண்டாக்கியதால் ஆத்திரமடைந்த சிங்கள இராணுவம் அப்பாவி தமிழர்களைக் கொன்று குவிக்கும் வெறியாட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டது.

25 இராணுவ லாரிகளில் நூற்றுக்கணக்கான இலங்கை இராணுவ வீரர்கள், யாழ்ப்பாணம் அருகே தமிழர்கள் அதிகமாக வாழும் கிராமங்களில் மே 9 ஆம் திகதி காலையில் புகுந்தனர். வீடுகளுக்குத் தீ வைத்தும் கண்ணில் கண்ட தமிழர்களையெல்லாம் சுட்டுத் தள்ளியும் வெறியாட்டம் ஆடினார்கள்.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் ரோடுகளில் இராணுவ டாங்கிகள் அணிவகுத்துச் சென்றன. இந்த டாங்கிகளைத் தமிழர்களின் வீடுகள் மீது மோதச் செய்து தரைமட்டம் ஆக்கினார்கள். பொலிகண்டி, ஓராணி, நவின்தில், வல்வெட்டித்துறை ஆகிய கிராமங்களில் இத்தகைய அக்கிரமங்களில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டனர்.

### ஒரே நாளில் 200 பேர் பலி

பொலிகண்டி என்ற இடத்தில் உள்ள நூல் நிலையத்திற்குள் பெண்கள், குழந்தைகள் உட்பட 50 தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் இழுத்துச் சென்று உள்ளே அடைத்தனர். பின்னர் அந்தக் கட்டடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்தனர். இதில் 50 பேரும் கொல்லப்பட்டனர்.

ஊரணி என்ற இடத்தில் 25 தமிழ் இளைஞர்களை வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளித் தங்களின் ரத்த வெளியைத் தணித்துக் கொண்டனர்.

தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், உடுப்பிட்டி, கெருதாவில், நவின்தில், பருத்தித்துறை உள்ளிட்ட கிராமங்களில் ஒரே நாளில் 200 தமிழர்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். ஆண், பெண், குழந்தைகளின் பிணங்கள் ரோடுகளில் சிதறிக்கிடந்தன. தொண்டமனாறு முதல் பருத்தித்துறை வரை தமிழர்களின் வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

### பள்ளிக்கூடத்தில் துப்பாக்கிச் சூடு

கொக்குவில் டெலிவிஷன் நிலையம் மீது தமிழ்ப் போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து 10 ஆம் திகதி அதிகாலையில் வடகிழக்குக் கடற்கரையில் உள்ள மன்னார் தீவு பொலிஸ் நிலையத்தை விடுதலைப்புலிகள் தாக்கினார்கள். வெடிகுண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள்.

இந்தத் தாக்குதலில் 4 பொலிசார் செத்தனர். மீதி இருந்த பொலிஸ் தப்பி ஓடி, சிங்கள இராணுவ முகாம்களில் தஞ்சம் அடைந்தனர். இந்தத் தாக்குதலை நடத்திய விடுதலைப்புலிகள் பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலை இலங்கை இராணுவத்தால் சமாளிக்க முடியவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்து அவர்கள் அப்பாவி தமிழர்களைக் கொன்று குவிப்பதில் ஈடுபட்டனர்.

நெல்லியடி பகுதியில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்குள் இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்தனர். அங்கு படித்துக்கொண்டிருந்த பிஞ்சுக் குழந்தைகளைக் கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். இதில் 80 குழந்தைகள் பரிதாபமாக இறந்தனர். அவர்களது உடல்கள் பள்ளிக் கூடத்தில் சிதறிக் கிடந்தன.

### இராணுவ லாரி சிதறியது

இலங்கையில் தமிழர்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாணம் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் தீவிரம் அடைந்ததால் அப்பாவி தமிழர்களைக் கொன்று குவிக்க அந்தப் பகுதிக்கு அதிக அளவில் இராணுவ வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

இப்படி யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ லாரியை விடுதலைப்புலிகள் தாக்கினார்கள்.

சிங்கள இராணுவ வீரர்கள், 45 லாரிகளில் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு சென்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கொடிகாமம் என்ற இடத்தில் விடுதலைப்புலிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கி அந்த 2 லாரிகள் தூள் தூளாகச் சிதறின. இதில் 12 இராணுவ வீரர்கள் உடல் சிதறிச் செத்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

### இருமுனைத் தாக்குதல்

திருகோணமலை மாவட்டத்தில் சாம்பல் தீவு என்ற இடத்தில் பிரதான சாலையில் ரோந்து சென்று கொண்டிருந்த பொலிஸ் ஜீப் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 3 பொலிசார் குண்டு பாய்ந்து செத்தனர்.

இதைத் தொடர்ந்து உப்புவெளியில் இருந்த பொலிசார் ஒரு வேனில் அவர்களின் உதவிக்காக வந்தனர். வழியில் கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் வெடிக்கச் செய்தனர். இதில் 10 பொலிசார் கொல்லப்பட்டனர்.



(தொடரும்)

# ஆழ ஊடுருவும் தாக்குதல் குறித்து

# ஐ.நாவிற்கு அறிக்கை வழங்கப்படாது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**ஆழ ஊடுருவும் தாக்குதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவைக்கு அறிக்கை வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று இதனைத் தெரிவித்துள்ளார்.

போர்க்காலத்தில் இடம்பெற்ற ஆழ ஊடுருவும் தாக்குதல்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசெய்ன் கோரியதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சுதந்திரக் கட்சி நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான அறிக்கைகள் வெளி நபர்களுக்கு வழங்கப்படக் கூடாது என அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், இவ்வாறான எந்தவொரு அறிக்கையும் வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

நாட்டுக்கு நீண்ட காலம் சேவையாற்றிய இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நோய் வாய்ப்பட்டுள்ள சில புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களை பொலிஸார் பலவந்தமாக சிறையில் அடைத்துள்ளதாகவும் சரத் வீரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து தாம கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் உறுதியளித்துள்ளார். (இ)

# எந்தவொரு கொம்பனும் தலையிட முடியாது!

## மெகா பொலிஸ் திட்டம் குறித்து சம்பிக்க கருத்து



மெகா பொலிஸ் அபிவிருத்தி செயற்றிட்ட முன்னெடுப்புகளின் போது எந்தவொரு கொம்பனும் தலையிட முடியாது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

மெகா பொலிஸ் அபிவிருத்தித் திட்டமானது நாட்டின் எதிர்கால நலனை உத்தேசித்து முன்னெடுக்கப்படும் ஒரு முக்கிய செயற்றிட்டமாகும். இதன்போது ஒரு சிலருக்கு சிற்சிறு பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

எனினும் அமைச்சுப் பதவிகள், பணபலம், ஊடகப் பின்புலம் என்பவற்றைக் கொண்டு யாரேனும் இச்செயற்றிட்டத்திற்கு தடை போட முயன்றால் அவர்கள் தோற்றுப் போய்விடுவார்கள். எந்தவொரு அழுத்தத்துக்கும் அடிபணிய நான் தயாரில்லை. அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிப்பதன் காரணமாக ஒருசிலர் தங்களுடைய காணிகள் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திற்காகவும் சுவீகரிக்கப்படக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும். அதில் யாருக்கும் விலக்கு அளிக்க முடியாது என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மெகா பொலிஸ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழான வேரெஸ்காங்க அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அமைச்சர்களான தயா கமகே மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கிடையில் கருத்து மோதல் ஒன்று ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சர்க்கரை கலந்த குடிபானங்கள் மீது அரசுகள் வரி விதிக்க வேண்டும்

ஆரோக்கியமற்ற உணவை சந்தைப்படுத்துவதை உலக அரசுகள் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் சிறார்கள் மோசமாக பருமனாவதைத் தடுக்க சர்க்கரை கலந்த குடிபானங்கள் மீது அரசுகள் வரிவிதிப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

குழந்தைப் பருவத்தில் உடல் பருமனாதலை குறைப்பதற்கான முக்கியத்துவம் தொடர்பான அறிக்கை ஒன்றில் உலக சுகாதார நிறுவனம் இந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

1990 முதல் உலக அளவில் அதிக எடை கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 33 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் உலக சுகாதார நிறுவனத்தின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கா அல்லது ஆசியாவில் நான்கு கோடி சிறுவர்களில் 2 கோடி பேர் ஐந்து வயதாவதற்கு முன்னரே கடும் பருமனாகி விடுவதாகவும் இதற்கு வளர்ந்து வரும் நாடுகளில் ஆரோக்கியமற்ற மற்றும் சர்க்கரை கலந்த குடிபானங்களின் தீவிர சந்தைப்படுத்தலே காரணம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது சிறுவர்கள் வெளியில் விளையாடுவதை தவிர்த்து இணைய விளையாட்டுக்களில் அதிக நேரம் செலவிடுவதால் அவர்களுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாமையும் இந்தப் பிரச்சினைக்கு காரணம் என்றும் உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ)

## அரச சட்டத்தரணி பீரிஸ் நீக்கம்

ஊடகவியலாளர் எக்னெ லிகொட வழக்கில் அரச சட்டத்தரணி நீக்கப்பட்டுள்ளார். அரச சட்டத்தரணியாக திலிப பீரிஸ் கடமையாற்றி வந்தார். பதில் சட்டமா அதி பர் சுஹத கம்லத் இது பற்றி நேற்றுக் காலை அறிவித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டத்தரணி திலிப பீரிஸ் படையினருக்கு எதிராக குற் றம் சுமத்துவதனால் அவரை நீக்குமாறு படையினர் கோரி யுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நேற்று முன்தினம் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அரச அதிகாரிகளுக்கு இடையூறு ஏற் படுத்தியதாக சட்டத்தரணி திலிப பீரிஸ் மற்றும் சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும ஆகியோர் நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இன்று ஒரு தகவல்

### தள்ளிப்போடும் தவறான பழக்கம்

"பின்னாடி பார்த்துக்கலாம்,குடியாமுழுகிப் போய்விடும்?" என்று காரியங்களைத் தள்ளிப் போடுகிறவர்கள் வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது.

இன்றே,இப்பொழுதே,இந்த நொடியே செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் இலாபக் கணக்கைக் காண முடியும். உடனுக்குடன் செய்து முடிப்பது என்றால், வெந்ததும் வேகாததுமாக அவசரப்பட்டு முடிப்பது என்று பொருளல்ல!

ஒரு காரியத்தைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்து முடிப்பது என்பதுதான் தள்ளிப்போடாமை என்பதற்குச் சரியான பொருள்.

மேலும் இத்தகைய மனப் போக்கினால் வாய்ப்புகளும் நழுவி விடுகின்றன. வாழ்க்கையில் வாய்ப்புகள் என்பனவை வெள்ளத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் மனிதனை நோக்கி வரும் படகுகள் போன்றவை. சரியான நேரத்தில் அவற்றில் குதிப்பவன் கரையேறுகிறான். மற்றவன் தண்ணீரில் மூழ்கி மேலும் தத்தளிக்கிறான்.

மகனின் திருமணம் முதல் ஒரு கடிதம் எழுதிப் போடுவது வரை எந்தக் காரியத்தையும் உரிய நேரத்தில் செய்வதுதான் உகந்தது.

சிலர் தாங்கள் விரும்பாத ஆனால் சந்தித்தே தீர வேண்டிய காரியங்களைத் தள்ளிப்போட்டு, அந்த இடைப்பட்ட நேரத்திலாவது நிம்மதியாக இருக்கலாம் என்று முடிவு காண்கின்றனர்.

தவறு ஒன்றைச் சந்தர்ப்பவசமாக செய்து விட்ட ஒருவன், பொலிஸாருக்குப் பயந்து தலைமறைவாகத் திரிகிறான். "நம்மை சிறையில் தள்ளி விடுவார்களே" என்ற பயந்தான் காரணம் இந்தக் குற்றவாளி உலகம் புரியாதவன்.

காரணம்,

அந்த இடைப்பட்ட நாட்களிலும் அவன் தண்டனையை அனுபவிக்கிறான். அதாவது வெளியில் வரமுடியாத நிலை,பயம்,மனச்சாட்சியின் உறுத்தல் இவையும் அவனைக் கொல்லாமல் கொல்கின்றன.

பொலிஸ் அவனைப் பிடிக்கிறது. தண்டனையை அதிகமாக்குகிறது.

ஒருவேளை அவனே வலிய முன்வந்து சரணடைந்திருந்தால் தண்டனை குறைந்திருக்கும். இடைப்பட்ட காலத்தில் அனுபவித்த வேதனைகளும் மிஞ்சியிருக்கும்.

இத்தகைய நிலைதான் ஒரு விடயத்தைத் தள்ளிப் போடுகிறவர்களுக்கும் தள்ளிப்போடுவதால் இடைப்பட்ட காலத்தில் கிடைக்கும் இன்பம், மகிழ்ச்சி ஆகியவை எல்லாம் போலியானவை.

அதற்குப் பதிலாக,உடனே அவற்றைச் சந்தித்துப் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டால் கிடைக்கும் மன அமைதியே நிரந்தரமான இன்பம்.

எதையும் உடனுக்குடன் செய்வதால் காலமும் காசும் மிஞ்சுகின்றன.

என்றைக்கு இருந்தாலும் சந்திக்க வேண்டிய ஒன்றை இன்றே சந்திப்போம்!

என்றைக்கு இருந்தாலும் செய்து முடிக்க வேண்டியவற்றை இன்றே செய்து முடிப்போம்!

லேனா தமிழ்வாணன்

## விமான சேவை நிறுவனத்தில் நிதிமோசடி மகிந்தவின் மைத்துனரிடம் விசாரணை

இலங்கை விமான சேவையில் நடைபெற்றுள்ள நிதி மோசடிகள் குறித்து அதன் முன்னாள் தலைவர் நிசாந்த விக்கிரமசிங்கவிடம் இன்று ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தியின் சகோதரரான இவர் கடந்த ஆட்சிக் காலத்தில் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவராக செயற்பட்டிருந்தார். அக்காலப் பகுதியில் நிறுவனத்தில் பாரிய நிதிமோசடிகள் மற்றும் பதவி உயர்வு மோசடிகள் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்தவின் வெற்றிக்காக உழைத்த கலைஞர்களின் பொதுக்கூட்டங்களுக்கு விமான சேவைகள் நிறுவனத்தினால உணவு, பானங்கள் வழங்கப்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது.

மேலும் நிறுவனத்தின் ஒருசில அதிகாரிகளை துணைக்குச் சேர்த்துக் கொண்டு பாரிய நிதி மோசடிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்த விசாரணைகள் இன்று பாரிய நிதிமோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நடைபெறவுள்ளது.


இதன்போது நிசாந்த விக்கிரமசிங்க மட்டுமன்றி விமான சேவை நிறுவனத்தின் மேலும் சில அதிகாரிகளும் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர். (இ)



# சிறுவர் அரங்கம்

1345

## முனிவர் வந்திருக்கேன்!




கிராமத்தில் வசித்து வந்த ஆட்டிற்கு, காட்டிற்குச் செல்ல வேண்டுமென ஆவல் ஏற்பட்டது. உடனே, காட்டை நோக்கிச் செல்லத் தொடங்கியது அந்த ஆடு.

காட்டில் பச்சை இலைகளுடன் கூடிய செடி, கொடி, மரங்களைப் பார்த்ததும், மிகவும் மகிழ்ச்சியடைந்தது ஆடு.

"அடடே, காடானது இவ்வளவு பசுமையாக இருக்கிறதே! இத்தனை நாட்களாக நாம் காட்டை பற்றி தெரியாமல் இருந்து விட்டோமே... இனிமேல், நாம் கிராமத்திற்குச் செல்ல வேண்டாம். இந்த காட்டிலேயே தங்கி விட வேண்டியதுதான்" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டது.

காட்டில் பச்சை செடி, கொடிகளைப் பார்த்த மகிழ்ச்சியில் ஆடு வெகுநேரம் வரையிலும் மேய்ந்துகொண்டிருந்தது. மாலை நேரமானதையும் மறந்து மகிழ்ச்சியுடன் மேய்ந்து கொண்டிருந்தது ஆடு.

மாலைக் கருக்கல் வந்தவுடன் காடே இருட்டத் தொடங்கியது. அப்போதுதான் ஆடானது தன் நிலைக்கு வந்தது.

"ஐயோ, நான் பெரும் தவறு செய்து விட்டேனே! காடு இருட்டிவிட்டது. இந்த இருட்டில் நான் எங்கே செல்வது? ஆங்காங்கே கொடிய மிருகங்களின் சப்தம் கேட்கிறதே. நான் ஏதாவது மிருகங்களின் கண்களில் சிக்கினால் எனக்கு ஆபத்துதான் ஏற்படும். தற்போது ஏதாவது ஒரு குகையினுள் சென்று ஒளிந்து கொள்வோம். அதன்பின்னர் காலை பொழுது புலர்ந்ததும் காட்டை விட்டு கிராமத்திற்குச் செல்லலாம்" என்று மனதில் எண்ணியது.

உடனே அருகில் ஏதாவது குகை தென்படுகிறதா என்று பார்த்தது. தான் நின்றிருந்த இடத்தின் அருகே குகை ஒன்று தென்படவே, அந்தக் குகையினுள் சென்றது ஆடு.

குகையினுள் சென்ற ஆடு திடுக்கிட்டது. குகையின் உள்ளே சிங்கம் ஒன்று படுத்திருந்தது.

சிங்கத்தைக் கண்ட ஆடு திடுக்கிட்டது. அதே நேரத்தில், சிங்கமும் அந்த ஆட்டை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தது.

உடனே அந்த ஆடானது சிங்கத்திடமிருந்து நான் தப்பிக்க வேண்டுமானால் ஏதாவது ஒரு தந்திரத்தைக் கையாள வேண்டும். அப்போதுதான் நான் உயிர் பிழைக்க முடியும் என்று மனதுக்குள் நினைத்தது. ஆட்டின் மனதுக்குள் ஓர் யோசனை தோன்றியது. அது கம்பீரமாக சிங்கத்தைப் பார்த்தது.

"சிங்கமே, நான் ஒரு முனிவர். உன் குகையில் இன்று இரவு மட்டும் நான் தங்கிக் கொள்ள அனுமதி தருகிறாயா?" என்று கேட்டது.

"நீ ஆடல்லவா? உன்னைப் போய் முனிவர் என்கிறாயே," என்று கோபத்துடன் கேட்டது சிங்கம்.

"சிங்கமே, நான் இரவு நேரத்தில் மட்டும் ஆடாக இருப்பேன். பகல் நேரத்தில் என் வடிவத்தை மாற்றிக் கொள்வேன். சில நேரங்களில் மனிதனாகவும், இல்லையென்றால், ஆடு போன்றும் மற்றும் பல வடிவங்களில் இருப்பேன்," என்றது ஆடு.

அதனைக் கேட்டதும் சிங்கம் வியப்படைந்தது.

"ஆடே, நீ என்ன சொல்கிறாய்? நீ ஒரு முனிவரா? கேட்பதற்கே வியப்பாக இருக்கிறதே! அப்படியென்றால், உன்னை நான் ஆடு என்று அழைக்க மாட்டேன் முனிவர் என்றே அழைப்பேன்.

"முனிவரே, தாங்கள் தாராளமாக என்னுடைய குகையில் தங்கிக் கொள்ளலாம். இரவு முழுவதும் குகையில் படுத்து விட்டு காலைப்பொழுதில் எழுந்து செல்லலாம்," என்றது சிங்கம்.

"சிங்கமே, உனக்கு மிகவும் நன்றி. நிச்சயமாக நீ இறந்த பின்னர் சொர்க்கத்திற்குச் செல்வாய். உனக்கு அங்கே எல்லா விதமான சௌகரியங்களும் கிடைக்கும்!" என்றது ஆடு.

அதன்பின்னர் ஆடானது சிங்கத்தின் குகையில் படுத்துக் கொண்டது. மறுநாள் அதிகாலைப் பொழுதில் எழுந்து கொண்டது ஆடு.

அந்த நேரத்தில் சிங்கம் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. இதுதான் சரியான சமயம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆடானது வேகமாக குகையை விட்டு வெளியேறியது.

'அப்பாடா, நான் சிங்கத்தின் குகையில் இருந்து வெளியே வந்துவிட்டேன். இனிமேல், எனக்குப் பயமில்லை. நான் உடனடியாக இந்தக் காட்டைக் கடந்து என் கிராமத்திற்கே சென்று விட வேண்டும்' என்று மனதில் எண்ணியபடி ஓட்டமெடுத்தது ஆடு.

ஆடு தன்னுடைய புத்தி சாலித்தனத்தால் தப்பித்தது. இதுக்குத்தான் புத்தியை, "யூஸ்" பண்ணுங்க என்பது!




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1547 - எட்டாம் ஹென்றியின் இறப்பு. அவனது 9 வயது மகன் ஆறாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
- 1624 - கரிபியனில் முதலாவது பிரித்தானியக் குடியேற்ற நாடான செயின் கிட்ஸ் சர் தோமஸ் வார்னர் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1679 - சென்னை கோட்டைப் பகுதியில் சிறு நில நடுக்கம் உணரப்பட்டது.
- 1820 - ஃபாபியன் பெலிங்ஷோசென் தலைமையில் ரஷ்யா நாடுகாண் பயணக்குழு அண்டார்ட்டிக்காவை அடைந்தது.
- 1846 - அலிவால் என்ற இடத்தில் சீக்கியர்களுடன் இடம்பெற்ற போரில் சர் ஹறி ஸ்மித் தலைமையிலான பிரித்தானியப் படைகள் வெற்றி பெற்றனர்.
- 1882 - சென்னையில் முதன்முதலாக தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1909 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் குவாண்டானாமோ விரிகுடாவைத் தவிர்த்து கியூபாவின் மற்றைய பகுதிகளிலிருந்து விலகினர்.
- 1918 - பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியை புரட்சியாளர்கள் கைப்பற்றினர்.
- 1932 - ஜப்பானியப் படைகள் ஷங்காய் நகரைத் தாக்கினர்.
- 1935 - ஐஸ்லாந்து கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கிய முதல் நாடானது.
- 1986 - சாலஞ்சர் மீள்விண்கலம் புறப்பட்ட 73 ஆவது வினாடியில் வானில் வெடித்துச் சிதறியதில் ஏழு விண்வெளி வீரர்கள் கொல்லப்பட்டனர்.
- 1987 - மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கிராமத்தில் இலங்கை இராணுவத்தினரால் 86 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2002 - கொலம்பியாவில் போயிங் விமானம் ஒன்று அண்டெஸ் மலையில் மோதியதில் 92 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1853, ஹொசே மார்த்தி, கியூபாவின் புரட்சியாளர் (இ. 1895)
- 1922 - ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1993)
- **1925 - ராஜா ராமண்ணா, இந்திய அணுவியல் நிபுணர்**

**இறப்புகள்**

- 1939 - வில்லியம் யீட்ஸ், நோபல் பரிசு பெற்ற ஐரிஸ் எழுத்தாளர் (பி. 1865)
- 1996 - ஜோசப் புரொட்ஸ்கி, நோபல் பரிசு பெற்ற ரசியக் கவிஞர் (பி. 1940)
- 2007 - ஓ. பி. நாயர், இந்தித் திரைப்பட இசையமைப்பாளர்

### இராஜா இராமண்ணா



இராஜா இராமண்ணா (Raja Ramanna) ஜனவரி 28, 1925 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இந்திய அணு ஆற்றல் துறைக்கும் அதன் வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காற்றிய அணுக்கரு அறிவியலறிஞர். இந்தியாவின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மிகச் சிறப்பாகப் பங்காற்றியவர். இந்திய அணுக்கரு உலையின் தந்தை எனப் போற்றப்படுபவர். எழுச்சியூட்டும் தலைவராகவும் ஒரு சிறந்த நிர்வாகியாகவும் விளங்கியவர் இசைக் கலைஞர் சமஸ்கிருத இலக்கியம் மற்றும் தத்துவங்களில் மேதையாக விளங்கிய பன்முகத்தன்மை கொண்ட ஓர் முழுமையான மனிதர் எனப்போற்றப்படுபவர். 1974 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாள் இந்தியாவில் ராஜஸ்தான் பாலைவனத்தில் புவிக்கடியில் நடத்தப்பட்ட "சிரிக்கும் புத்தர்" (Operation Smiling Budhdha) என்ற மறைமுகச் சொல்லைப் பயன்படுத்தி முதல் அமைதியான ஐதரசன் குண்டு வெடிப்பு ஆய்வினை நடத்தியவர்.

# மோசடிகளை இல்லாதொழித்து நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



**(கொழும்பு)**

**இலங்கையில் பல மோசடிகள் இல்லாமல் செய்யப்பட்டு நல்லாட்சியை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதாக நற்சான்றிதழ் வழங்கிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமிழ் மொழியில் பேச முடியாமைக்கு வருந்துவதாகவும் அதற்காக தான் மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் மக்கள் ஆட்சி முறை ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தினை எதிர்ப்பவர்கள் கொலை செய்யப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், நாட்டில் நீதிமன்றம் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான வழியேற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தன்னுடைய அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட சில விடயங்கள் கடந்த அரசாங்கத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவே, நாட்டில் பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்திருந்ததாக குறிப்பிட்ட அவர், கடந்த அரசாங்க ஆட்சியாளர்கள் அரச துறையினை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் இனவாதம் பேசும் சிலர் இருப்பதாக கூறிய அவர் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் இணைந்து தானும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தனக்கு தமிழ் மொழியில் உரையாற்ற முடியாமல் போனமை வருத்தமளிப்பதாகவும் அதற்காக தான் மன்னிப்புக் கோருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் அமைச்சர்களான மனோ கணேசன், அகிலவிராஜ் காரியவசம் மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆசிரியர்களின் இடமாற்றத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது

### கிழக்கு பதில் முதலமைச்சர் அறிவுறுத்து

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான விடயங்களில் அரசியல் தலையீடுகள் ஒருபோதும் இருக்ககக்கூடாது என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரும், பதில் முதலமைச்சருமான ஏ.எல்.முஹமட் நசீர் தெரிவித்தார். கிழக்கு மாகாண சபை அமர்வு நேற்று முன்தினம் சபையின் தவிசாளர் சந்திரதாச கலபெத்திதலைமையில் இடம்பெற்றது. இதன்போது கிழகக்கு மாகாண சுகாதார அமைச்சரும், பதில் முதலமைச்சருமான ஏ.எல். முஹமட் நசீர் மேற கண்டவாறு உரையாற்றினார்.

வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியபதி கலபெத்தியினால் அவசர தனிநபர் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார். இதற்கு பதில் அளித்துப் பேசிய அவர்,

கிழக்கு மாகாணத்தில் புதிதாக நியமனம் செய்யப்படுகின்ற ஆசிரியர்கள் குறிப்பாக நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் நியமிக்கப்படுகின்றார்கள்.

ஆனால் இவ்வாறான நிபந்தனைகள் பின்பற்றப்படாமல் புதிதாக நியமனம் செய்யப்படுகின்ற ஆசிரியர்கள் குறிப்பிட்ட சில காலம் மட்டும் கடமையாற்றிவிட்டு அரசியல் தலையீடுகள் காரணமாக அவர்களின் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் கடந்த ஆட்சிக்காலத்தின் போதே அதிகரித்துக் காணப்பட்டது. 2011. 2012. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண அம்பாறை. மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கடந்த ஆட்சியாளர்களின் காலத்தின் போது முழுமையான அரசியல் அதிகாரங்களையும் பயன்படுத்தி குறிப்பிட்ட ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளனர்.

இதனால் கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் சமநிலை பேணப்படாமல் சில கல்வி வலயங்களில் ஆசிரியர்கள் வெற்றிடம் காணப்பட்டு வருகின்றது. எனவே ஆசிரியர்கள் விடயதில் எந்த அரசியல் தலையீடுகளும் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.

அத்தோடு தற்காலிமாக அரசியல் தலையீட்டால் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கும் நியமிக்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தார். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 616

Search for people, places and things  Nagendram  Home

**செல்வமனோகரன்**



அழகான ஆண் துணையாக வேண்டாம்,
அழகாய் பார்த்துக்கொள்ளும் ஆண்
கூட வேண்டாம்,
'அழ' வைக்காத ஆண் கணவனாக
கிடைத்தால் போதும்..!!

**உதயன்**




**யோகபாலன்**





**ராஜ ரூபன்**


உனக்கென உலகத்தில்
யாருமே
இல்லாமல் இருக்கலாம்
ஆனால்
யாரோ ஒருவருக்கு
நீயே உலகமாக இருக்கலாம்

– DAD and MOM for you

**ராகுலன் பாலா**




**பாலசர்மா**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொருளாதார வீழ்ச்சியுடன் ஆரம்பமாகும் ஒரு அரசியலமைப்பின் உருவாக்கம்?

உருவாக்கப்படவிருப்பது அரசியலமைப்பு சபையொன்றா? அல்லது... அரசியலமைப்பு ரீதியிலான சபையொன்றா? அதாவது, புதிய அரசியலமைப்பா அல்லது பழைய அமைப்பையே தழுவிய ஒன்றா?

அதிகார பரவலாக்கத்தின் பொருட்டு கூடுதல் அதிகாரங்களை வழங்கும்படியாக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் சட்ட ஏற்பாடுகள் (provisions) விரிவாக்கம் செய்யப்படப்போகிறதா அல்லது அரசியலமைப்பு சமஷ்டி ஆட்சி (federalism), ஒற்றையாட்சி (Unitary state) அல்லது இணைப்பாட்சி (United) என்ற புதிய் மாற்றத்துடன் உருவாக்கப்படப் போகிறதா?

ஜனாதிபதி என்ற அந்த அதியுயர் அந்தஸ்திற்கான பதவி இழக்கவிருக்கும் அதிகாரங்களுடன் பாராளுமன்றமும் பிரதமர் பதவியும் பெற்றுக் கொள்ளப்போகும் அதிகாரங்கள் என்னென்ன?.... எத்தகையவை? என்பதுடன் அவற்றின் வீச்சுக்கள்– எல்லைகள் எவ்வளவு? ஏற்கனவே உள்ள தேர்தல் ஒழுங்கு விதிமுறைகளின் எதிர்காலம் என்ன?

இந்த கேள்விகளுக்கெல்லாம் விடை தேடும் முயற்சியென்பது மனதிற்கு விரக்தியூட்டுவதாக இருக்குமென்பதே இவற்றுக்கெல்லாம் சுருக்கமானதும் எளிதானதுமான ஒரே விடையாகும். எப்படியிருந்தாலும் இந்த விடயம் சர்வதேசமும் சம்பந்தப்பட்ட மட்டில் இது சம்பந்தப்பட் அநேகரையும் அச்சமூட்டி இதிலிருந்தது பின்வாங்க வைக்கக் கூடிய ஒருவித பயங்கர மறைமுக சக்தியே இக்கேள்விகளிலும் இவற்றிலிருந்து எழக் கூடிய ஏனைய எந்தவித கேள்விகளிலும் தொக்கியிருக்கிறதென்பது இலங்கை அரசியலை உன்னிப்பாக அவதானித்துவரும் எவருக்கும் தெரிந்த ஒன்றுதான்!

புதிய அரசானது 'புதிய' அரசியலமைப்பு என்ற பகிரங்க அறிவிப்புடன் தனது 2 ஆவது வருட ஆட்சியை ஆரம்பித்த போதே அதன் எதிராளிகள் அல்லது எதிர்க்கட்சியின் ஒரு பகுதியினர் அந்த அறிவிப்பிலிருக்கும் 'புதிய' என்ற எண்ணத்தையே மனதிலிருந்து அகற்றிவிடும்படி கூறி தமது எதிர்ப்பையும் பகிரங்கமாகவேதான் அறிவித்திருந்தனர். எனவே அவர்கள் விரும்புவதெல்லாம் ஏற்கனவே நாட்டிலிருக்கும் அதே அரசியலமைப்பையே. என்றாலும் அந்த 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கு திருந்தங்களை மட்டும் அனுமதிக்கலாமென்பதே அவர்களது கருத்தாக (அநேகமாக) தெரிகிறது.

எனவே சில அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவது போல் 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுக்குப் பின் உருவாக்கப்படும் இந்த 3 ஆவது குடியரசு அரசியலமைப்பு என்று கூறப்படும் புதிய அமைப்பானது 2 ஆவது குடியரசு அரசியலமைப்பிற்கான ஒருவித இணைப்பாகவே இருக்கும் எனலாம். அதாவது 2 ஆவது குடியரசு அரசியலமைப்பிற்கான மேலதிக சட்ட ஏற்பாடாக கூட்டிக் கொடுக்கக் கூடிய அதிகாரங்களையே (2nd plus- Republic) இது குறிப்பிடுவதாயிருக்கிறது.

ஒரு காலத்தில் இந்த 1978 அரசியலமைப்பு பற்றிய விரிவான அறிவு கொண்டிருந்தவர்களில் அதனை அர்த்தமற்ற வெறும் கண்துடைப்பு என்று கூறியவர்களும் அதற்கு ஆதரவாக குரல் கொடுத்து தீவிர பிரசாரமும் மேற்கொண்டவர்களான அனைவருமே இப்போது அது கிடப்பில் கிடந்து நடைமுறைப்படுத்தப்படாமலேயே காலங்கடந்து போய்விட்டதால் அதற்குப் பதிலாக புதிய உருவாக்கமொன்றே தேவைப்படுவதாக உணர்கிறார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

"அரசியல் அமைப்புகள் கற்களில் பதிக்கப்பட்ட சட்ட ஆவணங்கள் அல்ல!" என்று ஜனாதிபதியவர்கள் கூறியது ஒருவரலாற்றுப் பதிவேயாகும். புகழ்பெற்ற ஒரு வரலாற்றுக்கால ராஜதானியாக விளங்கிய பொலனறுவை நகரத்தின் மைந்தன் என்பதால் புராதன அரசர்களையும் அவர்களது ஆணைக்குரிய சட்டங்களின் நிலையற்ற தன்மை பற்றிய சிறப்பான அறிவு அவருக்கு இருந்திருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

கடந்தவாரம் "எமது சட்ட விவகாரங்க்ள் பத்தியின் எழுத்தாளரால் பெறுமதிக்குரிய குறிப்பான சில விடயங்கள் இந்த பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தன. அரசியலமைப்பு உருவாக்கங்களில் அதிகாரங்கள் பற்றிய விடய சம்பந்தமான கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் அதில் பெரும்பகுதி பரந்து பட்ட பொதுமக்கள் மத்தியில் உண்மையும் நியாயமானதுமான கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் பொதுவான கருத்துக் கள் பெறப்படல் வேண்டுமென்பதே அவரது கருத்தாகும்.

அவ்வாறில்லாமல் மேலோட்டமானதும் அவசரமானதுமான கண்ணோட்டத்தில் அரசிய லமைப்பு விடயங்கள் கையாளப்படுமானால் இறுதியில் உச்ச நீதிமன்றத்தில் அவற்றுக்கு தடையே உருவாகும். இதற்கு நல்ல உதாரணமாக 'தென் ஆபிரிக்க அனுபவ'த்தை அவர் குறிப்பிட்டுக் காட்டுகிறார். ஏனென்றால் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட வேண்டிய எந்த மாற்றமும் எந்த விதத்திலும் நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்புக் கிணங்கவும் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறிப்பாக அவற்றுக்கென்றே வழங்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கிணங்கவும் மேற்கொள்ளப்படவும் வேண்டுமென்பதே நியதி!

அரசியலமைப்பு விடய சம்பந்தமாக 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவமொன்றை ஓர் உதாரணமாக அவர் இங்கு முன்வைக்கிறார். 'ஒத் திசைவே இல்லாத ஜோடிகளின் ஊடலில்' அந்த வருடத்தில் உருவாக்கப்பட்ட 'உத்தேச அரசியலமைப்பு' தகர்ந்து போனது என்ற விதமாக அவர் குறிப்பாக உணர்த்துகிறார். இருப்பினும் இதுமட்டிலான சிறந்த கருத்துக்களுடன் கூடிய கருத்தரங்குகள் இடம் பெறலாம்.

பண்டிதமணி களும் புத்திஜீவிகள் என அழைக்கப்படுவோரும்கூட உயர்ந்த இடங்களிலிருந்து உன்னதமான கருத்துக் களுடன் வரலாம். வந்தாலும் அனைத்தும் கேலிக்கிடமாகியும் போகலாம். நிதியுதவி என்ற பெயரில் வெளிச்சக்திகளின் பின்னணி கொண்ட முகப்பு அமைப்புகளூடாக சொந்த நலனுக்காக சொற்ப தொகைகளும் (ஒப்பீட்டளவில்) அள்ளி வீசப்படலாம். எப்படியும் சொந்த நாட்டையும் நாட்டிற்கான அடிப்படைச் சட்ட விதிகளின் வழி செல்லும் மக்களையும் முன்னிறுத்தி செயற்படும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் தனது மனச் சாட்சிக்கெதிராக இணங்கிப்போவதென்பது மிகவும் வேதனைக்குரிய சுமையானதொரு பாரிய பணியாகவே இருக்கும் என்பது மிகவும் தெளிவான ஒன்றேயாகும்.

இரண்டாவதாக அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், அரசியல் அமைப்பில் வழங்கப் பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களது அங்கீகாரத்துடன் மட்டும் மாற்ற முடியாதபடி பாதுகாப்பு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க சிலவற்றை மாற்றுவதற்கு மக்கள் அனுமதியைப்பெறும்படியான மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற முக்கிய விடயமேயாகும்.

1981 ஆம் ஆண்டின் "பொது மக்கள் கருத்துக் கணிப்பு இல–71 இன்படி இவ்விடயம் மக்களின் விருப்பத்தை க்ட்டுப்படுத்தாது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இவ்விடயமானது, மக்கள் தமது ஒப்புதலை 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற எளிதான ஒரு பதிலின் மூலம் அளித்துவிட தூண்டும் அல்லது கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் தனிப்பட்ட ஒரு பிரச்சினையல்ல" என்ற உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடொன்றும் ஏற்கனவே உள்ளது. எப்படியும் இந்த பிரச்சினையை முற்றிலுமாக அலசி ஆராய்ந்து தீர்மானிக்க அரசால் மட்டும் தனித்த விதத்தில் முடியாதென்றால் பிரச்சினை மட்டில் தீர்மானத்தை யார் மேற்கொள்வது? என்ற கேள்வி எழுகின்றது. எனவே இவ்விடயத்தின் நகர்வை சற்றே நிறுத்தி அவதானிப்போம்!



சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் "பொருளாதார வீழ்ச்சியுடன் ஆரம்பமாகும் ஓர் அரசியலமைப்பின் உருவாக்கம்" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம்...

(தொடரும்)

**தமிழில் யோகர்**

## போலி முகவர்களினால் ஏமாற வேண்டாம்

# மாடிக்குடியிருப்புகளை வாங்குவோருக்கு அதிகார சபை அறிவுறுத்தல்கள்

குடியிருப்பு அபிவிருத்தி என்ற பெயரில் நேர்மையற்ற முறையில் சில தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் குடியிருப்பு வசதிகளை செய்து கொடுப்பதாகக் கூறி பொது மக்களிடம் பணத்தை வைப்பிலிடுமாறு கோருவது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு மாடிக்குடியிருப்பு அதிகார சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

அவ்வாறு குடியிருப்பு வசதிகளை வழங்க முன்வருவோரிடம் கீழ்வரும் தகவல்களையும் விபரங்களையும் குடியிருப்புக்கான பணக் கொடுப்பனவைச் செய்வதற்கு முன்னதாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்குவதாக அந்த எச்சரிக்கை அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக காணி உறுதியின் பிரதி, பிரதேச அதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமப்பத்திரம், பிரதேச அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீதி விபரம் தொடர்பான பிரதி மாடிக்குடியிருப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம், நகர அபிவிருத்தி அதிகார சபை அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கட்டடத்திற்கான திட்டவரைபு அனுமதிப்பத்திரம் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான அனுமதி கடிதம் போன்றவற்றை பரிசீலித்தபின் நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

மேலும் நீர் வடிகாலமைப்பு வசதிகள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி, தண்ணீர், மின்சாரம், கழிவகற்றல் வசதி, மின் பிறப்பாக்கி மற்றும் எதிர்பாராத நிலைமைகளின் போது பெறக் கூடிய நீர் மற்றும் மின்சார வசதிகள், வாகன தரிப்பிட வசதி, குடியிருப்பு கட்டப்பட்ட காலப் பகுதி, உறுதி வழங்கப்படும் திகதி போன்ற விபரங்களையும் கேட்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (3)

## விசேட செயலமர்வு நாளை

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் நடத்தும் "நிலைத்து நிற்கக்கூடிய வினைத்திறனான பசுமைக் கட்டட நிர்மாணம்" எனும் தலைப்பிலான விசேட செயலமர்வு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் சுற்றுலா விடுதியில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 6609 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தொழிற் றுறை மன்ற திட்ட உத்தியோகத்தர் ஆ.விமல் ராஜ் அறிவித்துள்ளார். (இ-5)

# செய்தித் துளிகள்

## வெளிநாட்டுத் தூதரகங்களில் ஆளணிப் பற்றாக்குறையுள்ளது

வெளிநாட்டு தூதரகங்களில் பதவி வெற்றிடங்கள் நிலவுவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 25 அதிகாரிகளுக்கு நியமனங்கள் வழங்கியதாக வெளிவிவகார பிரதியமைச்சர் ஹர்ச டீ சில்வா தெரிவித்துள்ளார். எனினும் பல வெற்றிடங்கள் காணப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருடத்திலும் மேலும் 25 அதிகாரிகளை பணிக்கமர்த்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரிவதற்காக நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கே புதிய நியமனங்கள் வழங்கப்பட வுள்ளதாக வெளி விவகார பிரதியமைச்சர் ஹர்ச டீ சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## இளைஞன் கொலை, மூவர் காயம்

ஹதபான்கொடையில், 28 வயதான இளைஞனொருவர் கூரிய ஆயுதத்தினாலும் கட்டையாலும் தாக்கப்பட்டு, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 11.10இற்கு கொலை செய்யப்பட்டுள்ளதுடன், பெண்ணொருவர் உட்பட மேலும் இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், உடுமுல்ல பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பல்மதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒருவர் மேலதிக சிகிச்சைக்கென கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ)

## அகதிகளுக்கான புதிய விதிமுறை

ஐரோப்பாவிலேயே மிக கடுமையான விதிகள் என்று நம்பப்படும் அகதிகளுக்கான புதிய விதிகளை அமுல்படுத்துவது தொடர்பிலான சர்ச்சைக்குரிய முன்மொழிவுகளுக்கு டென்மார்க் நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புதிய விதிகளின் படி, அகதிகளிடமிடமிருக்கும் ஆயிரத்து 400டொலர்களுக்கும அதிகமான மதிப்பிலான பொருட்களை எல்லை காவல் துறையினர் கைப்பற்ற முடியும். எனினும் ஒரு வரது திருமண மோதிரங்கள போன்ற உணர்வு பூர்வமான மதிப்பை கொண்ட பொருட்களுக்கு விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

டென்மார்க் நாட்டு பிரஜைகளே கூட அரசாங்க சலுகைகளை பெறுவதற்கு, தமது விலைமதிப்புயர்ந்த சொத்துக்களை விற்க வேண்டியுள்ளது என்று கூறி தமது நடவடிக்கையை டென்மார்க் அரசாங்கம் நியாயப்படுத்தியுள்ளது. (இ)

## பேனாவால் குத்திய ஆசிரியர்; வைத்தியசாலையில் மாணவன்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேனை நகரத்தை அண்மித்த பாடசாலையொன்றில் ஆசிரியரொருவர், தரம் 4இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை பேனாவால் தலையில் குத்தியதால் குறித்த மாணவன் காயத்துடன், லிந்துலை வைத்தியசாலையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளான். (இ)

# லயஞான குபேரபூபதி தெட்சணாமூர்த்தி வரலாற்று ஆவண இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையம் நடத்தும் லயஞான குபேரபூபதி தெட்சணாமூர்த்தியின் வரலாற்று ஆவண இறுவெட்டு மற்றும் நூல் வெளியீடு நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய அறங்காவலரும் தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையத்தின் தலைவருமான க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகள் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

இதற்கமைய காலை அமர்வு 8.30 மணிக்கும் மாலை அமர்வு பிற்பகல் 2 மணிக்கும் என நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் காலை அமர்வில் யாழ். இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் பல்கலைக்கழக சமூகவியல் தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வடமாகாண கல்வி அமைச்சின் முன்னாள் உதவிச் செயலர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ இசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தா அருள்வளர் சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜோ.ஜெபரத்தினம் அடிகளார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடக்கவுரையினை தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமைய தலைவர் (இங்கிலாந்து) பொறியியலாளர் க.நற்குணம் வழங்கவுள்ளதுடன் நினைவுரையை சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் நூல் வெளியீட்டுரையினை தென்னிந்திய திரைப்பட இயக்குநர் அம்சன்குமார் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

இவ் அமர்வில் யாழ்ப்பாணத்தின் முன்னணி வாய்ப்பாட்டு கலைஞர்கள் மற்றும் வயலின் மிருதங்க வித்துவான்கள் வழங்கும் பஞ்சரத் தினக் கீர்த்தனைகள் இடம்பெறவுள்ளதுடன் தமிழ்நாடு பிரபல வயலின் மேதை கன்னியாகுமாரி அம்மாவின் பிரதம சிஷ்யர்களான தமிழ்நாடு திருமருகல் கணேஸ், தினேஸ் சகோதரர்கள் வழங்கும் வயலின் இசையும் மெண்டலின் சிவகுமாரின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## குளவிக்கொட்டுக்கு பத்துப் பேர் இலக்கு

தலவாக்கலை, ரட்ணகிரி தோட்டத்தில் 10 தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகிய 9 பெண்களும் ஒரு ஆணும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### தலையில்

தலையில் மயிர்களுக்கு இடையே மச்சம் இருப்பதுண்டு. அவ்வாறு இருக்கும் அந்த மச்சம் வெளியில் தெரியாது. மயிர்கள் மறைத்துக் கொண்டிருக்கும். ஆதலால் மயிர்களை விரல்களால் விலக்கிக் கொண்டு தான் மச்சங்களைக் கண்டறிதல் வேண்டும்.

பொதுவாகத் தலையில் மச்சம் இருந்தால் நல்ல பலன்களைக் கொடுக்கும். தலையில் மச்சம் உள்ளவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருப்பார்கள். இவர்களால் பிறருக்கு உதவிகள் உண்டே ஒழிய இவர்கள் பிறருடைய உதவியை நாட மாட்டார்கள். இவர்கள் தங்கள் முயற்சியினாலேயே நல்ல முன்னேற்றம் காண்பார்கள். பெரிய முயற்சிகளை செய்து சிறந்த பலன்களைப் பெறுவார்கள். தலையில் வலது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் மாமன்னர்களைப் போன்ற அதிகாரங்கள் செலுத்தக்கூடிய நிறைவேற்று அதிகாரி, உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் திகழ்வார்கள். இவர்கள் அரசாங்கப் பெரும் பதவிகள் வகிப்பார்கள்.

தலையில் இடதுபக்கத்தில் மச்சம் இருந்தால், அவர்கள் பெரும்புகழுடன் விளங்குவார்கள். இவர்களில் சிலர் இல்லற வாழ்க்கையை விட மற்றவர்களால் வணங்கப்படுகின்ற துறவற வாழ்க்கையை மேற்கொள்வார்கள். சிலர் யோக வித்தையில் தேர்ந்து யோகிகளாக விளங்குவார்கள்.

### உள்ளங்காலில்

பொதுவாக உள்ளங்காலில் (பாதத்தின் கீழ்ப்பகுதியில்) மச்சம் உள்ளவர்களுக்கு அவரவர் தரத்திற்கேற்ப சைக்கிள், மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் முதலிய வாகன சௌக்கியங்கள் உண்டாகும். இவர்கள் ஒரு இடத்தில் நிலையாக இல்லாமல் பிரயாணம் செய்து கொண்டே இருப்பார்கள்.

உள்ளங்காலின் நடுவில் மச்சம் இருப்பவர்கள் மிகவும் புகழ் பெற்றவர்களாக விளங்குவார்கள். இவர்களில் சிலர் சினிமா, நாடகம் முதலியவைகளுக்கும் பாட்டுக்கள் புனைந்து தந்து புகழ் பெறுபவர்களாகவும் அழகிய கவிதைகள் இயற்றும் கவிஞர்களாகவும் சங்கீதக் கலையில் சிறந்தவர்களாகவும் விளங்குவார்கள்.

கால் விரல்களுக்குக் கீழே உள்ளங்காலில் மச்சம் இருந்தால் இத்தகையவர்கள் சுகமாகப் பொது வாழ்க்கையை நடத்த முடியாது. எல்லோருடனும் சுமுகமாகப் பழகுவதென்பது இவர்களுக்குத் தெரியாது. ஆகவே மற்றவரும் இவருடன் சேராமல் ஒதுங்கியே சென்று விடுவார்கள். எனவே, இவர்கள் பிறரை வெறுப்பது போல, பிறரால் இவர்களும் வெறுக்கப்பட்டு வறட்சியான வாழ்க்கையை நடத்துவார்கள். அநேகம் ஆசைகள் இருந்தாலும் எதையும் நிறைவேற்ற முடியாமல் உலர்ந்த மரம் போல நின்று விடுவார்கள்.

கால்கட்டை விரலுக்கு கீழே மச்சம் இருந்தால் பொது வாழ்க்கை மிகவும் நன்றாக அமையும். இவர்களுக்கு எதிலும் தமது முயற்சியில்லாமலே தானாகவே பிறர் உதவி கிடைக்கும். இவர் மற்றவரை மனதார நேசித்தாலும் நேசிக்காவிட்டாலும் இவரை மற்றவர்கள் மதிப்போடு நேசிப்பதுடன் சமயோசிதமாக சகாயமும் செய்வார்கள்.

(தொடரும்)

## புகையிரதத்தில் பயணச்சீட்டு இன்றி பயணித்த 95 பேரிடம் தண்டப்பணம்

பல்லேவெல புகையிரத நிலையத்தில் புகையிரதப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது, புகையிரதப் பயணச்சீட்டு இல்லாமலும் மூன்றாவது தரப் பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு இரண்டாந் தரத்தில் பயணித்த 95 பயணிகளிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து 2 இலட்சத்து 42 ஆயிரத்து 50 ரூபாவை தண்டப்பணமாக அறவிட்டுள்ளதாகவும் சுமார் ஐந்து மணித்தியாலங்களுக்குள் 81 பேரிடமிருந்து மாத்திரம் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 790 ரூபாவை அறவிட்டுள்ளதாகவும் புகையிரத பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)

## முகநூலில் பணம் பறிப்பு; சந்தேகநபருக்கு வலைவீச்சு

போலியான முகநூலின் மூலம் பலரை அச்சுறுத்தி வந்த நபர் என்று குற்றப் புலனாய்வு பிரிவினரால் சந்தேகிக்கப்படும் நபரை, கைது செய்யுமாறு, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சித்தாலோ அல்லது வெளிநாட்டிலிருந்து நாட்டுக்குள் வரும் போதோ கைது செய்யப்படவேண்டும் என்று, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு, நீதவான் பணித்துள்ளார்.

பெண் என்று குறிப்பிட்டு போலியான முகநூலைக் கொண்டு பல பணக்காரர்களுடன் நண்பர்களாகி அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து பணம் பறித்து வந்த நபரை கைது செய்வதற்கே இவ் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ)

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2016~12.02.2016



**திடீர் திருப்பங்கள் தித்திக்க வைக்கும்! தேச பக்தியும் தெய்வ பக்தியும் கொண்டு வாசமலராக வாழும் சிம்ம இராசி நேயர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, செய்யும் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும் விதத்திலேயே இருக்கின்றது. குருவின் ஆதிக்கம் மாதத் தொடக்கத்தில் தன ஸ்தானத்தில் இருக்கின்றது. பிறகு மாதக்கடைசியில் வக்ர இயக்கத்தில் உங்கள் ராசியை நோக்கி வரப்போகின்றது.

## திடீர் திருப்பங்கள் தித்திக்க வைக்கும்!

பஞ்சம அஷ்டமாதிபதியான குரு பகவான் நெஞ்சம் மகிழும் விதத்தில் நிறைய நற்பலன்களை வழங்கப்போகின்றார்.

பொதுவாக குரு இருக்கும் இடத்திற்கும், பார்க்கும் இடத்திற்கும் தோஷங்கள் ஏற்படாது என்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். ஆற்றல் மிக்கவர்கள் பின்னணியாக இருந்து உங்கள் கூட்டு முயற்சி வெற்றி பெற வழிவகுத்துக் கொடுப்பர். வீட்டில் உள்ளவர்களும் குணமறிந்து செயற்படுவர். வெளிவட்டாரப் பழக்க வழக்கமும் உதவிகரமாக இருக்கும்.

பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவர். விலகிச்சென்ற உறவினர்கள் உங்கள் தயவை நாடி வந்திணைவர். கல்யாண வாய்ப்புகள் கைகூடவில்லையே என்ற கவலை இனி அகலும். புதிய வரன்கள் வாயில் தேடி வந்து சேரும்.

குருபலம் நன்றாக இருந்தால் தான் கெட்டிமேளம் கொட்டும். பிள்ளைச் செல்வமும் துள்ளி விளையாடும். தொழிலிலிருந்த மந்த நிலை மாறும். இந்த மாதத்தில் எந்த மாதமும் இல்லாத அளவு இலாபமும் கிடைக்கும். சனியின் ஆதிக்கம் கொஞ்சம் மேலோங்கி இருக்கின்றது. ஆரோக்கியத் தொல்லைகளைக கொடுக்கும் அர்த்தாஷ்டமச் சனி என்பதால் அதைக் கட்டுப்படுத்த ஆதியந்தப் பிரபு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!**

உங்கள் ராசிக்கு 3, 10 இற்கு அதிபதியான சுக்ரன், ஜனவரி 20 ஆம் திகதி தனுசு ராசிக்குச் செல்கின்றார். புத சுக்ர யோகம் செயற்படப் போகின்றது. தனாதிபதியும், சகாய ஸ்தானாதிபதியும் ஒன்றாகச் சேரும்பொழுது பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அருளாளர்களின் ஆசியோடு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சொத்துக்களால் வரும் ஆதாயம் மட்டுமல்லாமல் சொந்தங்களாலும் ஆதாயம் வந்து கொண்டே இருக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். மனக்கசப்பு மாறும். வசூலாகாத தொகை இப்பொழுது வசூலாகி இதயத்தை மகிழ்விக்கும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

புதன் உங்கள் ராசிக்கு 2, 11 இற்கு அதிபதியாவர். அவர பிப்ரவரி 6 ஆம் திகதி மகரத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். சூரியனோடு இணைந்து புத- ஆதித்ய யோகத்தை உருவாக்கப் போகின்றார். எனவே அரசியல் செல்வாக்கு மேலோங்கும். புதிய பொறுப்புகளும, பதவிகளும் கிடைக்கும். தொழிலுக்காக காத்திருந்த அரசு வழிச்சலுகைகள் இப்பொழுது வருவதற்கான அறிகுறிகளும் தெனபடும். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைத் தருவார். எனவே பொருளாதார நிலை உயரும்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**




பிப்ரவரி 7 ஆம் திகதி முதல் குரு வக்ரம் பெற்று சிம்ம ராசிக்குச் செல்கின்றார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் பொழுது அபரிமிதமான பலன்களை அள்ளி வழங்கும். இழப்புகளை ஈடுசெய்ய புது வழியைக் கையாளுவீர்கள். உழைப்பிற்கேற்ற பலன் உங்களுக்கு வந்து சேரும். சில காரியங்கள் முயற்சி எடுக்காமலேயே முடிந்து விடும். இம்மாதம் ஜென்ம குருவால் சிறப்பான பலன் கிடைக்க முல்லைப்பூ மாலை அணிவித்து, குரு கவசம் பாடி குரு தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்யுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பொறுப்புகள் கூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய முன்வருவர். கூடுதல் அன்பு செலுத்தி உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களு க்கு பணிச்சுமை குறையும். பணச் சுமை கூடும்.

உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்புச் செய்வர். மாதக்கடைசியில் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு பிள்ளைகளால் பெருமை சேரும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புகழ்கூடும். மதியூகத்தால் வெற்றிக் கனியை எட்டிப் பிடிப்பர்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**கடன் சுமை குறைந்து கவலைகள் மறையும்! பிறரிடம் யோசனைகள் கேட்டாலும் முடிவில் உங்கள் யோசனைப்படியே செயற்படும் கன்னி இராசி நேயர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் குரு சந்திர யோகம் செயற்படுகிறது. மேலும் குருவும், புதனும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள். தனாதிபதி சுக்ரனும், சகாய ஸ்தானாதிபதி செவ்வாயும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள்.

## கடன் சுமை குறைந்து கவலைகள் மறையும்!

எனவே, வருமான பற்றாக்குறை அகலும். காரியங்கள் கைகூட கடைசி நேரத்தில் பணம் கைக்கு வந்து சேர்ந்து விடும்.

கட்டடப்பணியிலருந்த தொய்வுகள் அகலும். கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரவில்லையே, குழந்தைகளுக்கு வயது ஏறிக் கொண்டே செல்கிறதே, சனிப் பெயர்ச்சி முடியட்டும், குருப்பெயர்ச்சி முடியட்டும் என்று காத்திருந்தவர்களுக்கு இப்போது புதிய விடிவு காலம் ஏற்படப்போகிறது.

எனவே, இனி எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். இடமாற்ற சிந்தனைகள் மேலோங்கும். மாதக்கடைசியல் குரு வக்ர இயக்கத்தில் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போவதும் யோகம் தான்.

4, 7 இற்கு அதிபதி 12 இல் பயணிக்கும் போது வாழ்வில் நிறைய திருப்பங்கள் உருவாகும். பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும். விற்காத சொத்துக்கள் விற்று அதிக வரவை கொண்டு வந்து சேர்க்கும். மேலும் நற்பலன்களைப்பெற அதற்குரிய வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது.

உங்களுக்கு யோகம் தரும் கிரகங்களாக விளங்கும் குரு, சுக்ரன், செவ்வாய், புதன் ஆகிய நான்கு கிரகங்களுக்கும் உரிய அதிதேவதைகளை கையெடுத்து கும்பிட்டு காரியங்களைத் தொடங்குங்கள்.

சிறப்பு வழிபாடுகளையும் மேற்கொண்டால் செல்வ நிலை உயரும். சிக்கல்களில் இருந்து விடுபடவும் முடியும். நவக்கிரகங்களின் அனுகூலம் இருந்தால் நல்ல வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கும்!

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி**

ஜனவரி 20 ஆம் திகதி சுக்ரன் தனுசு ராசிக்கு பெயர்ச்சியாகிறார். உங்கள் ராசிக்கு 2, 9 இற்கு அதிபதியான சுக்ரன் 4 இல் சஞ்சரிக்கப்போவது யோகம்தான். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பூர்வீக சொத்துக்களில் இதுவரை ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் இப்பொழுது நல்ல முடிவுக்கு வரும். தாய்வழி ஆதரவும், தாய்வழி உறவினர்களால் ஒத்துழைப்பும் கிடைக்கும். தொழில் வளர்ச்சியை முன்னிடடு, பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்வீர்கள்.

**மகர புதனின் சஞ்சாரம**

பிப்ரவரி 6 ஆம் திகதி மகர ராசிக்கு புதன் செல்லப் போகிறார். உங்கள் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கை தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். குடும்பத்தினர்களின் குறைகளை தீர்க்க முயற்சிப்பீர்கள்.

குடும்ப ஒற்றுமைக்கு பங்கம் விளை வித்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். பிணக்குகள் தீர்ந்து பெரிய மனிதர்களின் தொடர்பு ஏற்படும். புத-ஆதித்ய யோகத்தின் விளைவாக பிரகாசமான எதிர்காலம் உருவாகும் அறிகுறிகள் தென்படும்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்**




பிப்ரவரி 7 ஆம் திகதி குரு சிம்ம ராசிக்கு வக்ர இயக்கத்தில் செல்கிறார். இதன் விளைவாக திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிசென்ற வரன்கள் மீண்டும் வந்து சேரலாம். ஆரோக்கிய தொல்லை அகலும்.

பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர். விருந்துகளிலும், விழாக்களிலும் கலந்து கொள்ள வாய்ப்புகள் கைகூடி வரும். இம்மாதம் வியாழக்கிழமை விரதமிருந்து குரு பகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

சொல்லைச் செயலாக்கி காட்டும் மாதமாகும். சுற்றத்தார் போற்றுமளவிற்கு வாழ்க்கை தரம் உயரும். கற்ற கல்விக் கேற்ற வேலையும் கிடைக்கும்.

கணவன், மனைவிக்குள் இருந்த பிரச்சினைகளும் தீரும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிக்கு உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வரன் தேடும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கரம் குளிர பொருட்களை கணவர் தரும்போது அதில ஒரு பகுதியை எடுத்து சேமித்து வைத்திருந்த நீங்கள் இப்பொழுது அந்த தொகையிலிருந்து விலை உயர்ந்த பொருளை வாங்கும் அமைப்பு உருவாகும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்க வேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். -ஃபிராங்கிலின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வண்டில் மாட்டுக்கு காது வெட்டும் முறைமை

மாற்றங்களை விரும்பாத இனங்கள் என்றொரு ஆய்வு செய்து பட்டியல் தயாரித்தால் ஈழத் தமிழினத்துக்கு நிச்சயம் முதலிடம் கிடைக்கும்.

அந்தளவுக்கு மாற்றங்களை நாம் விரும்புவது மிகமிகக் குறைவு எனலாம். இதனால் சாதகம் என்பதை விட பாதகமே அதிகம் என்பதையும் இவ்விடத்தில் புரிந்து கொள்ள வேண்டும்.

இது ஒரு புறம் இருக்க, முன்பு எல்லாம் எங்கள் விவசாயச் செய்கையில் எருது மாடுகளின் பங்கு என்பது மிகச் கணிசமான இடத்தைக் கொண்டிருந்தது. உழவுத்தொழில் தொடக்கம் விவசாய உள்ளீடு மற்றும் வெளியீடுகளை ஏற்றி இறக்குதல் வரை அனைத்திலும் எருது மாடுகளே பங்கு கொண்டன.

இப்போது வண்டில்களையும் வண்டில் மாடுகளையும் காண்பது அரிதாகிவிட்டது என்பது தெரிந்த கதை. எருது மாடுகளின் உழைப்பு இருந்த போது வண்டில் இழுக்கின்ற எருது மாட்டின் இரண்டு செவிகளில் பெரும் பகுதியை வெட்டி விடுகின்ற ஒரு முறை உண்டு. எருது மாட்டிற்கு நன்மையாக அமையும் என்ற நோக்கிலேயே காதுகள் வெட்டப்படுகின்றனவாயினும் அதற்குள் இருக்கக் கூடிய மிருகவதை பற்றிய வாதங்கள் தனித்து ஆராயப்பட வேண்டியவை.

எருது மாடுகளின் காதுகளை வெட்டி விடுவதால் எருது மாட்டிற்கு என்ன நன்மை என்பதே இப்போது உங்களிடம் எழக்கூடிய கேள்வி.

பொதுவில் மாட்டு வண்டிலில் செல்பவர்கள் வண்டியின் ஓட்டத்தை வேகப்படுத்துவதற்காக ஒரு பெரிய தடியை வைத்திருப்பர். மாட்டிற்கு அடிக்கும் பொருட்டு தடியை ஓங்கும் பொழுது மாட்டின் கண்களை அவற்றின் காதுகள் மறைத்து விடுகின்றன.

எனவே, காதுகளை வெட்டி விடுவதன் மூலம் தடியை ஓங்குவதை கண்ட எருது மாடுகள் வேகமாகச் செல்லும். இதனால் மாட்டிற்கு அடி விழுவது தவிர்க்கப்படுகிறது. மாட்டின் ஆயுள்காலம் வரை அடி விழுவதை விட, செவிகளை வெட்டி மாட்டுக்கு அடி விழுவதை தடுப்பது நல்லது என்ற நிலையில்தான் எருது மாடுகளுக்கு காது வெட்டும் நடை முறை பின்பற்றப்பட்டன.

இத்தகைய நடைமுறைகளும் தேவையானவை என்பதை எவரும் அடியோடு நிராகரித்து விட முடியாது. இதன் காரணமாக தமிழ் மக்கள் சிலரை வேகப்படுத்த காதுகளை வெட்டி தடியை ஓங்கி ஓடவைப்பதற்கு முயற்சிக்கின்றனர். அந்த முயற்சியின் பயனாக எல்லோரும் தீர்வுத்திட்டம் தயாரிக்க தயாராகி விட்டனர்.

ஐயா! இவ்வளவு காலமும் எங்க போனவியள். இவ்வளவுகாலமும் இவையின் சிந்தனை செழும்பேறிக் கிடந்ததா? என்ற கேள்விகள் எழுகின்றனவாயினும் காது வெட்டி கம்பை உயர்த்தினால் வேகம் எடுக்கும் என்ற உண்மையை பேரவைக்குள்ளால் அமுலாக்கிய தமிழ் மக்கள் மகாகெட்டிக் காரர்தான்.

## கிரமமான அடிப்படையில்தான்

# இராணுவத்தின் அனுபவங்கள் உலக நாடுகளுக்கு வழங்கப்படும்

இராணுவத்தின் அனுபவங்கள் கிரமமான அடிப்படையிலேயே உலக நாடுகளுக்கு வழங்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நாட்டுப் படையினரின் திறமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பிலான பயிற்சிகளை பெற்றுக் கொள்ள சர்வதேச ரீதியில் அதிக எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

எனினும் யாருக்கு எவ்வாறு பயிறசி அளிப்பது என்பது பற்றி ஆராயாமல் வெறுமனே பயிற்சிகள் வழங்கப்படாது.

சர்வதேச பாதுகாப்புப் படையினர் என்ற போர்வையில பயங்கரவாதிகள், கொள்ளையர்கள் கூட இலங்கைப் படையினரிடம் பயிற்சி பெற்றுக் கொள்ளக் கூடும்.

விரிவாக ஆராயப்படாது பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது. பயிற்சி தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால் முப்படையினர் மற்றும் பொலிஸாரிடம் அது குறித்து அறிவித்து தகவல்கள் திரட்டப்படும். பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் படையினரின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள பல்வேறு தரப்பினர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறான கோரிக்கைகள் தொடர்பில் இந்தியாவின் கருத்துக்கள் கோரப்படும சந்தர்ப்பங்களும் உண்டு என பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# நற்கருணை திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக நடைபெற்று வருகின்ற நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை திருவிழா இடம்பெறவுள்ளது.

02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.15 மணிக்கு பெருவிழா திருப்பலியும் காலை 6.30 மணிக்கு கூட்டுத்திருப்பலியும் இடம் பெறவுள்ளது. (இ-5)

# 5நாட்களுக்கு ஒரு தடவை பாரதூரமான விபத்துக்கள்

## பிரதிப்பொலிஸ்மா அதிபர் அமரசிறி

ஐந்து நாட்களுக்கு ஒரு தடவை உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய வாகன விபத்துக்கள் பாதசாரிகள் கடவையில் இடம்பெறுவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரட்ன தெரிவித்துள்ளார். கடந்த 2014 ஆம் ஆண்டு பாதசாரிகள் கடவையில் இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 58 ஆகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டு இது 77 ஆக அதிகரித்துள்ளது.

மோட்டார் வாகனங்களை செலுத்தும் போது சாரதிகளின் கவனக்குறைவு மற்றும் கைத்தொலைபேசிப் பாவனை போன்ற காரணங்கள் விபத்து இடம் பெறுவதற்கான பிரதான காரணங்களாகும்.

வாகனத்தில் பயணிக்கும் போது கைத்தொலைபேசியில் உரையாடுவதால் வாகனச் சாரதியின் கவனக் குறைவினால் விபத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன. அதுமட்டுமின்றி பாதசாரிகளும் சில விபத்துக்களுக்கு பொறுப்பாளிகளாக உள்ளனர். வாகனங்கள் செல்வதற்கான சமிக்ஞை வழங்கப்படுகின்றபோது பாதசாரிகள் கடவையை விரைவாக கடந்து விட வேண்டும் என்று செல்வதனாலும்அல்லது தொலைபேசிஉரையாடலில் ஆழ்ந்தபடி கடவையை கடப்பதனாலும் இந்த விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

மங்கலான வெளிச்சம் மற்றும் சரியாக தீர்மானிக்காமல் கடவையை கடக்க முற்படுவதும் விபத்துக்களுக்கு இட்டுச் சென்றுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இதேவேளை 2014 ஆம் ஆண்டு விபத்துக்களினால்2440பேரும் 2015 ஆம் ஆண்டு 2796 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பாதசாரிகள் கடவையைக் கடக்கும் போது வரும் வாகனங்களின் வேகம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் வாகன சாரதிகள் கடவைப் பகுதிகளில் வாகனத்தின் வேகத்தை குறிப்பாக பாடசாலைகளுக்கருகில் குறைக்க வேண்டும் எனவும் போக்குவரத்துப் பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர். (3)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பொங்கல் பண்டிகையில் வீட்டின் கூரையில் பூ வைப்பது ஏன்?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது பழமொழி, தைத் திருநாளை வரவேற்க, வீட்டின் கூரையில் பூ காப்புக் கட்டிய பிறகே, பொங்கல் கொண்டாட்டம் தொடங்குகிறது. எதற்காக அதை வைக்கிறோம், என்பது, அவர்களுக்கு தெரிவதில்லை. பயனறிந்து, கூரைப்பூ பயன்படுத்தி, பொங்கல் கொண்டாடுவது, கிராமங்களில்தான்.

கூரைப்பூவில் ஆறு விதமான தாவரம் இருக்கு. அதன் ஒவ்வொன்றுக்கும் பல்வேறு குணம் உண்டு.மா இலை காற்று மண்டலத்தில் ஒட்சிசன் செறிவை அதிகப்படுத்தி காற்றை சுத்தப்படுத்தும்,கூரைப்பூ (கண்ணுப்பிள்ளைப்பூ) பூச்சிகள் பிரவேசத்தை தடுக்கும், சீரான சிறுநீர் போக்கு ஏற்படுத்தும், விஷமுறிவுக்கு உதவும்.

வேம்பு இலை நோய் எதிர்ப்புத்தன்மை கொண்டது, கொசுக்களை தடுக்கும்.

ஆவாரை பூத்திருக்க, சாவாரை கண்டதுண்டோ என்ற முன்னோர் மொழிக் கேற்ப ஆவாரம்பூ, நீரிழிவு நோய், தோல் வியாதிகளை தடுக்கும்.

தும்பைச் செடி மார்கழி பனி முடிந்து, கோடை தொடங்குவதால் ஏற்படும் காலநிலை பிணிகளை குணமாக்கும். பிரண்டை வயிற்றுப்புண் நீக்கும், செரிமானத்திற்கு உகந்தது.

இந்த ஆறு வஸ்துகளையும், மஞ்சள் துணியில் கட்டி, வீட்டின் முன் தொங்க விட்டால், மங்கலம், பாதுகாப்பு, ஆரோக்கியம், கிடைக்கும் என, நம் முன்னோர்கள் எழுதிச் சென்றுள்ளனர்.

# மகிந்த ஆட்சியில் காட்டிய அட்டகாசத்தை நல்லாட்சியிலும் காட்ட ஞானசார தேரர் முயற்சி

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மகிந்த ஆட்சியில் காட்டிய அட்டகாசத்தை இந்த ஆட்சியிலும் காட்டலாம் என நினைத்து செயற்பட்டார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்குளி இந்துக் கல்லூரியில் சகல இன மாணவர் களையும் பிரதிபலிக்கும் முகமாக நேற்று முன்தினம் இடம் பெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த தேரருக்கு சட்டம் ஒழுங்கு நீதி நியாயம் இல்லை. அவர் ஒரு பொலிஸ்மா அதிபர் போன்றே செயற்பட்டதை நாம் அவதானித்தோம். ஆகவே இந்த ஆட்சியில் எல்லோருக்கும் நீதி நியாயம் சமமாக இருத்தல் வேண்டும். இந்த நீதியான நல்லாட்சிக்குத்தான் நானும் கடந்த 10 வருட காலமாக பாடுபட்டு ஜனவரி 8ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நல்லாட்சியை கொண்டு வந்தோம்.

கடந்த ஆட்சியில் பொலிஸ் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் தமிழர், முஸ்லிம்களென்றால் ஒரு வித்தியாசமான நீதி, சட்டம் ஒழுங்கு இருந்தது. அதற்கு அவர்களுக்கு அந்த ஆட்சியில் இருந்த தலைமைத்துவங்களினால் அவ்வாறு செயற்பட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. பொலிஸார், நீதிபதிகள் தமது சட்டத்தை சரிவரச் செய்யமுடியாமல் இருந்தது.

கடந்த ஆட்சியில் சரத் பொன்சேகாவும் (இராணுவ தளபதி) சிறையில் இருந்தார். அப்போது இந்த பௌத்த குரு அவரை சிறைக்கு போய் பார்த்தாரா? அல்லது நீதிமன்றத்திற்கு சென்றாரா? ஊடகவியலாளர் எக்னெலிகொட காணாமல் போவதற்கு காரணமாக இருந்த இராணுவ வீரர்களுக்கே அவர் ஆதரவாக ஹோமாகம நீதிமன்றுக்கு சென்றதும் மட்டுமல்லாமல் அங்கு அவரது பழைய பாணியை செய்துள்ளார். இவர் 14 நாட்களாவது சிறைசென்று வருவதை யிட்டு நாம் சந்தோசப்படுகினறோம் இதுதான் எமது வெற்றி. கடந்த காலத்தில் பள்ளி வாசல்கள், இந்து கோவில்கள் கிறிஸ்தவ மதஸ்தானங்கள உடைக்கப்பட்டன.

வெள்ளை வான் கலாசாரம் இருந்தது. ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோர் கொலை செயயப்பட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சத்திய தரிசனம்



## சுயநலமின்றி சேவை செய்

❖ உள்ளத்தூய்மை பெற, சுயநலமின்றி பிறருக்கு சேவை செய்து வாழ்வது மட்டுமே வழி.

❖ செய்யும் செயல் சரியானது தானா என்று உங்களை நீங்களே கேட்டுக் கொண்டு செயலாற்றுங்கள்.


❖ எண்ணம், சொல், செயல் மூன்றாலும் சத்தியத்தை கடைப்பிடிப்பவன் எப்போதும் சாந்தமுடன் இருப்பான்.

❖ காலத்தை வென்றவர் கடவுள் ஒருவரே. அவரை கணப்பொழுதும் மறந்து விடாதீர்கள்.

❖ நமக்கு தேவையானதைக் கடவுளிடம் வேண்டிக் கொள்வதில் தவறில்லை.

# ரபாடா அபாரம்

# தென்னாபிரிக்காவின் வெற்றி தொடர் இங்கிலாந்து வசமானது






இங்கிலாந்து அணிக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 280 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி செஞ்சூரியனில் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டிவில்லியர்ஸ் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். அதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்கா ஸ்டீபன் குக் (115), அம்லா (109), டி காக் (129) ஆகியோர் சதத்தால் முதல் இன்னிங்சில் 475 ஓட்டங்கள் குவித்தனர்.

இங்கிலாந்து அணி சார்பில் பென் ஸ்டோக்ஸ் 4 விக்கெட்டும், ஸ்டூவர்ட் பிராட், மொயீன் அலி தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 342 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. அணித்தலைவர் குக் (76), மொயீன அலி (61) அரைசதம் கடந்தனர்.

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்துவீச்சாளர் ரபாடா அபாரமாக பந்துவீசி 7 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பின்னர் 133 ஓட்டங்கள் முன்னிலையில் 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்கு 248 ஓட்டங்கள் எடுத்திருந்த போது டிக்ளேர் செய்தது. அம்லா 96 ஓட்டங்களும், பாவுமா 78 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதனால் இங்கிலாந்து அணிக்கு 382 ஓட்டங்கள் வெற்றி இலக்காக கொடுக்கப்பட்டது. தனது 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க வீரர்கள் அணித்தலைவர் குக் (5), ஹால்ஸ் (1) ஏமாற்றினர்.

அடுத்து வந்த காம்ப்டனும் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். இதனால் 18 ஓட்டங்களுக்கே இங்கிலாந்து 3 விக்கெட்டை இழந்தது. நேற்றுமுன்தினம் 4 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 3 விக்கெட்டுக்கு 52 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஜோ ரூட், ஜேம்ஸ் டெய்லர் தலா 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது.

இதில் தொடர்ந்து விளையாடிய ரூட் (20), டெய்லர் (24) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இத்னையடுத்து விக்கெட்டுகள் மளமள வென்று சரிந்தன.

இங்கிலாந்து 101 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் தென்னாபிரிக்கா 280 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணியின் ரபாடா 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இந்தப் போட்டியில் அவர் மொத்தம் 13 விக்கெட்டுகளை அள்ளினார்.

ஏற்கனவே இங்கிலாந்து தொடரை கைப்பற்றிய நிலையில் இந்த வெற்றி தென்னாபிரிக்காவுக்கு (1-2) ஆறுதல் வெற்றியாக அமைந்தது. (க)

## ஒரு நாள் தொடரிலிருந்து ஸ்டெய்ன் விலகல்



தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது. ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 3 ஆம் திகதி தொடங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டியின் போது ஸ்டெயினுக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. அதன்பின் அனைத்து போட்டிகளிலும் அவர் வெளியில்தான் இருந்தார். தற்போது இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் இருந்தும் ஸ்டெய்ன் விலகியுள்ளார்.

மேலும், உடற்தகுதி பெற்றால் இருபது-20 தொடரில் இடம்பெறுவார் என்று கூறப்படுகிறது. இருந்தாலும், மார்ச் மாதம் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக இருபது-20 தொடர நடைபெற இருக்கிறது. அதன்பின் இருபது-20 உலகக்கோப்பை போட்டி நடக்கவிருக்கிறது. இந்த இரண்டிலும் பங்கேற்கும் வகையில் ஸ்டெய்ன் தயாராகுவார் என்று கூறப்படுகிறது. நான்காவது டெஸ்டில் கைல் அபாட் காயம் அடைந்தார். அவர் முதல் ஒருநாள் போட்டியில் பங்கேற்பது கடினம்தான். அத்துடன் மோர்னே மோர்கல் மற்றும் ரபாடா ஆகியோருக்கு சில போட்டிகளில் ஓய்வு கொடுக்க தென்னாபிரிக்கா முடிவு செய்துள்ளது. (க)

## பாகிஸ்தான் - நியூசிலாந்து 2வது ஒருநாள் போட்டி இன்று

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதும் 2 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேப்பியரில் இன்று (28 ஆம் திகதி) நடைபெறவுள்ளது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பாகிஸ்தான் இன்று பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. நியூசிலாந்து அணி இந்த ஆட்டத்திலும் வென்று தொடரை வெல்லும் ஆர்வத்துடன் இருக்கிறது. அந்த அணி ஏற்கனவே 20 ஓவர் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அவுஸ்திரேலியாவை வென்றது இந்தியா






அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில், இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

அடிலெய்டில் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைக் குவித்தது. வேகமான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட அவ்வணி, 4 ஓவர்களில் 40 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர், 2 விக்கெட்டுகளை இழந்து 41 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும் விராட் கோலி, சுரேஷ் ரெய்னாவின் சிறந்த இணைப்பாட்டமூடாகப் பெறப்பட்ட 134 ஓட்டங்களின் உதவியுடன், சிறந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் விராட் கோலி, 55 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களைக் குவித்தார். தவிர சுரேஷ் ரெய்னா 41 (34), ரோஹித் ஷர்மா 31 (20) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஷேன் வொட்சன், 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

189 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சிறப்பான ஆரம்பத்தைப் பெற்ற அவ்வணி, 8.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 89 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்டாலும், அதன் பின்னர் விக்கெட்டுகளைத் தொடர்ச்சியாக இழந்து தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் ஆரொன் பின்ச் 44 (33), ஸ்டீவன் சுமித் 21 (14) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் ஜஸ்பிறிட் பும்ரா மற்றும் இரவிச்சந்திரன் அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, ஹார்டிக் பாண்டியா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். (க)

## கடலில் நாயை...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி நபர் தனது வளர்ப்பு நாயை வாரத்தில் ஒரு தடவை கடற்பரப்பில் குளிக்க வைப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இதற்கமையவே நேற்றைய தினமும் தனது நாயை குளிக்க வைப்பதற்காக கடற்பரப்புக்குச்சென்றவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. ஆனால் அவரது நாய் மட்டும் வீடு நோக்கிச் சென்றுள்ளது. இதனால் சந்தேகம் கொண்ட வீட்டார் கடற்பரப்புக்கு சென்றுள்ளனர்.

இதேவேளை மேற்படி குடும்பஸ்தரின் சடலம் கடற்கரையில் ஒதுங்கியிருந்தது. இதனையடுத்து இது தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ-5-30)

## யாழ்.பல்கலை...

விளக்கமறியலில் வைக்கப்பட்டமைக்கு தென்பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் கண்டன பேரணிகள் என பதற்றமான சூழ்நிலை காணப்படும் சூழலில்,

எங்களுக்கு பௌத்த விகாரை வேண்டும் என எழுதப்பட்டு, இறுதியில் யாழ்.பல்கலைக்கழக பௌத்த மாணவர்கள் அமைப்பு என துண்டுப் பிரசுரத்திற்கு உரிமை கோரப்பட்டும உள்ளது. இதனால் தமிழ், முஸ்லிம் மாணவர்களிடையே பதற்ற நிலை தோன்றி காணப்படுகின்றது.

மேற்படி சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சிலர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகம் தமிழ் மரபுப்படி அமைந்த பல்கலைக்கழகம் என்பதனால் அங்கு இந்து கோவில் ஒன்றே ஆரம்பம் தொட்டு வழிபாட்டு இடமாக காணப்படுகின்றது. கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் தமது வழிபாடுகளை ஒரு தனியான அறையில் வைத்தே மேற்கொண்டு வருகின்றனர்.

இது வரை காலமும் தமக்கென ஒரு வழிபாட்டு இடத்தை அமைத்து தருமாறு அவர்கள் கோரவுமில்லை. இவ்வாறு இருக்கையில் சிங்கள பௌத்த மாணவர்கள் மாத்திரம் தமக்கு பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்னால் பௌத்த விகாரை அமைத்து தருமாறு கோருவது ஏற்புடையதல்ல. இந்த துண்டு பிரசுரம் மதங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தும் சூழ்ச்சியாகும்.

ஏற்கெனவே பொசன் பண்டிகை என்ற பெயரில் யாழ்.பல்கலைக்கழகத்தை சூழ பௌத்த அலங்காரங்கள் வடிவமைக்கப்பட்டு, இராணுவத்தை அழைத்தும் நிகழ்வுகளை கொண்டாடி வருகின்றனர். இவ்வாறான நிலையில், பௌத்த விகாரை அமைத்து விட்டால் யாழ்.பல்கலைக்கழகத்தின் பாரம்பரியம் முற்றாக அழிக்கப்பட்டுவிடும்.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் மாணவர் ஒன்றியம், ஆசிரியர் ஒன்றியங்கள் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் என ஏனைய மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-4)

## பிள்ளையானு...

அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனை மீண்டும் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அடுத்த மாதம் 10-ம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். கணேசராஜா உத்தரவிட்டார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம 25 ஆம் திகதி மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி அன்று கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் பிள்ளையான் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

இதேவேளை நேற்று முன்தினம் 26 ஆம திகதி கிழக்கு மாகாண சபை அமர்வில் நீதிமன்ற உத்தரவின் பேரில் பிள்ளையான் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## துன்னாலையில்...

இந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது காணியை துப்புரவு செய்யும் போது 5 மீட்டர் நீளமான உயிருடன் மனிதரை விழுங்கும் மலைப்பாம்பு நகர்வதை அவதானித்துள்ளார். அச்சமடைந்த அவர் உடனடியாக உதவிக்கு சிலரை அழைத்துள்ளார்.

குறித்த மலைப்பாம்பு உயிருடன் பிடிக்க அவர்கள் முயன்ற போதிலும் முயற்சி கைகூடாத நிலையில் அவர்கள் அதனை மண்வெட்டியால் வெட்டி உயிரிழக்கச் செய்துள்ளனர்.

மனிதரை விழுங்கும் தன்மை கொண்ட இம் மலைப்பாம்பு குறித்த பகுதியில் வசிப்பதற்கான தன்மைகள் மிக அரிதாக காணப்படும் நிலையில் மேற்படி சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (செ-12)

## தீ விபத்து...

மடைந்ததோடு ரூபா 9 இலட்சம் பெறுமதியான இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரூபா 4 இலட்சம் பணம், ஒரு தொகை நகை மற்றும் வீட்டு உறுதி என்பன எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 6 மணியளவில் ஊரெழு கிழக்கு ஆனந்தகானம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த பாஸ்கரன் துசிக்கா (வயது17)என்ற பாடசாலை மாணவியே முகம், கை, கால் என்பவற்றில் தீக்காயங்களுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் காலை 6 மணிக்கு குறித்த வீட்டில் மின்சாரம் தடைப்பட்ட நிலையில் குப்பி விளக்கின் உதவியுடன் பிளசர் மோட்டார் சைக்கிளில் இருந்து மேற்படி மாணவி பெற்றோலை குழாய் மூலம் உறிஞ்சி எடுத்துள்ளார்.

இதன்போது தவறுதலாக அருகில் இருந்த விளக்கு தட்டுப்பட்டு குறித்த மாணவி மீது நெருப்பு பட்டதோடு அருகில் இருந்த பிளசர் மோட்டார் சைக்கிள் மற்றும் 200 சிசி வகையான மோட்டார் சைக்கிள் ஆகிய இரண்டிலும் தீ பற்றியுள்ளது.

இதில் இரண்டு மோட்டார் சைக்கிளும் முழுமையாக தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

பிளசர் மோட்டார் சைக்கிளில் ரூபாய் 4 இலட்சம் பணம், ஒருதொகுதி நகைகள் மற்றும் வீட்டு உறுதி பத்திரம் என்பன வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை அனைத்து எரிந்து நாசமாகியுள்ளது.

மேற்படி தீ விபத்துச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11-78)

## புள்ளி விபரங்க...

குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இக் குழு திரட்டும் புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்கள் அனைத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒரு வாரத்திற்குள் ஒப்படைக்கப்பட்டு, மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று காலை நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பி.எம்.யூ.டி. பஸ்நாயக்க, இராணுவ தளபதி, விமானப் படைத் தளபதி, கடற்படை தளபதிகள் உட்பட யாழ்.மாவட்டத்தில் உள்ள முப்படைகளின் கட்டளைத் தளபதிகள், பிரதேச செயலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலின் முடிவில் ஊடகவியலாளர்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தின் மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று இன்று (நேற்று) யாழ்.மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் எந்தெந்த கிராம சேவகர் பிரிவுகளில் எவ்வளவு காணிகள் மீள்குடியேறாமல் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது தொடர்பான புள்ளி விபரங்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படைகளின் தளபதிகளிடம் கையளித்தோம்.

அதேபோன்று இன்னமும் மீள்குடியேறாமல் முகாம்ங்களில் உள்ள மக்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் அடங்கிய விபரங்களையும் அவர்களிடம் கையளித்திருந்தோம். இதுதவிர குறித்த புள்ளிவிபரங்களை மேலும் துல்லியமாக கணிப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு குழுக்களையும் நியமித்து தரவுகளை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிய தரவுகளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை குழுவுடன் இராணுவத்தினரும் இணைந்து கொள்வார்கள். இக் கலந்துரையாடல் மிக முக்கியமாக இவ்வாறான தரவுகளை பெற்றுக் கொள்வதற்காகவே கூட்டப்பட்டிருந்தது. நியமிக்கப்பட்டுள்ள புதிய குழு ஒரு வாரத்திற்குள் முழுமையான தரவுகளை பெற்று அதனை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கையளிக்கும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்திருந்தார். (செ-4-9)

## பாதுகாப்பு செய...

விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். இதன்போது, யாழ்.மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றினையும் அவர் நடத்தியிருந்தார்.

மீள்குடியேற்றம் குறித்து ஆராய்வதற்காக அவர் பாதுகாப்பு செயலர் வருகை தந்த போதிலும், காணி விடுவிப்பு மற்றும் மக்களின மீள்குடியேற்றம் குறித்து உறுதியான நிலைப்பாடுகள் எவையும் எடுக்கப்படவில்லை எனவும் அறிய முடிகின்றது. இராணுவத்திற்கு தேவையற்ற காணிகளே விடுவிக்கப்படும் எனவும் மேற்படி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில்,யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், யாழ்.மாவட்ட முப்படைத் தளபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர், பாதுகாப்பு செயலரின் யாழ்.விஜயத்தின் போது கடும் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.(செ-4)

## ஊழல் போக்கில்...

யான இடத்தைப் பிடித்துள்ளன.

2014 ஆம் ஆண்டைப்போலவே 2015 ஆம் ஆண்டிலும் டென்மார்க் ஊழலற்ற நாடாக முதலிடத்தில் உள்ளது.

சோமாலியாவும், வட கொரியாவும் ஊழல மலிந்து காணப்படும் நாடுகளாக கடைசி இடமான 167 ஆவது இடத்தில் உள்ளன.

இந்தியா இந்தப் பட்டியலில் 76 ஆவது இடத்தில் உள்ளது. இந்தியா கடந்த ஆண்டை விட இவ்வாண்டு 9 இடங்கள் ஏற்றங்கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2015 ஆண்டின் உலகளாவிய ஊழல் போக்குக் குறியீட்டின் தரவரிசைப் பட்டியலை, டிரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் அமைப்பு வெளியிட்டுள்ளது. (செ-12)

## மீண்டும் உணவு...

யேல் 14 சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளான நாம் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

நேற்றையதினம் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்ட போதும் இவர்களுக்கான நீதி, தமிழர் என்ற ஒரே காரணத்தால் தொடர்ந்தும் மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் மீண்டும் ஒரு பட்டினிப் போராட்டத்தை தமிழ் அரசியல் கைதிகள் எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது.

இத்தகைய போராட்டங்கள் வலுப்பெறும் போது, மக்கள் புரட்சி தாயகத்திலும் புலத்திலும் எதிரொலிப்பது தவிர்க்க முடியாததாகும். தியாக தீபத்தின் கனவுகள் அப்போது மீண்டும் நினைவில் எழும். தமிழ் அரசியல் கைதிகளின் பலமும் பலவீனமும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு அப்போதாவது புரியட்டும் என தமிழ் அரசியல் கைதிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (செ-9)

## படையினரை...

தினையும் ஏற்படுத்தின,புதிய அரசாங்கம் உடனடியாக ஊடகங்களும் சிவில் சமூக அமைப்புகளும் கண்காணிக்கப்படுவது மற்றும் தணிக்கை போன்றவற்றிற்கு முடிவுகட்டியது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கான அரசமைப்பு மாற்றங்களை முன்னெடுத்தது, நீதித்துறையின் சுதந்திரத்தினை மீள ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தது.

ஆனால் இலங்கையின் புதிய அரசாங்கம படையினர் தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவதை நிறுத்துவதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எதனையும எடுக்கவில்லை, பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும சித்திரவதை நடவடிக்கைகளையும் முடிவிற்கு கொண்டு வரவில்லை, இந்த அறிக்கை தயாரிக்கப்படும்வரை பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை,பலர் தொடர்ந்தும் இந்த சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர், பொலிஸார் தொடர்ந்தும் சித்திரவதைகளை பயன்படுத்துகின்றனர், வாக்குமூலங்களை பெறுவதற்காகவும் தனிப்பட்ட பகைகளிற்காகவும் கைது செய்யப்பட்டவர்களை துன்புறுத்துகின்றனர் என அவ்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)

## 3 தமிழ் கைதி...

வாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து, பிணை வழங்கப்பட்டிருந்தவர்களில் மூன்று பேரை வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏற்கெனவே பிணை வழங்கப்பட்டிருந்தவர்களில் 14 பேரை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் ஒரு வருட புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

புனர்வாழ்வு பெறுவது குறித்த தமது விருப்பத்தைத் தெரிவிப்பதுக்கு நீதிமன்றத்தினால் இரண்டு வார காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் மற்றுமொருவருக்கு திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமாறும் கொழும்பு மேலதிக நீதவான் அருணி ஆட்டிகல பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

ஏனைய 21 தமிழ் கைதிகளையும் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது

அத்துடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (செ-12)

## ஞானசார தேரர் வைத்தியசாலையில்



பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சுகவீன முற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு முதல் சுகயீன முற்றிருந்த அவர் நேற்று சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஞானசார தேரருக்கு ஹோமாகம நீதவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தபோது அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதேவேளை, ஞானசார தேரருக்கு எதிர் வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

## மாணவர்களுக்கு...

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அவர்களை சந்தித்தனர்.

இங்கு மாணவர்களின் திறமைகளைப் பாராட்டிய ஜனாதிபதி, அவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தமது ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொண்டார்.

மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி பரீட்சையைப்போன்று வாழ்க்கையிலும் சிறப்பாக சித்திபெற மாணவர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மேற்படி மாணவர்களுக்கு விருதுகளையும் ஜனாதிபதி வழங்கி வைத்ததோடு, சிங்கர் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் மடிக்கணனிகளும் மக்கள் வங்கியின் அனுசரணையின் கீழ் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கையில் ஆரம்ப முதல் இறுதி வரை இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான புரோட்பேன்ட் வசதிகளை வழங்கவும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தது.

2015 உயர்தரப் பரீட்சையில் விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் 30 புலமைப்பரிசில்களை வழங்க ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் முன்வந்தது. மாவட்ட மட்டத்தில் விசேட திறமைகளை வெளிக்காட்டிய 20 பேர்களுக்கும் படை வீரர்களின் பிள்ளைகள் 5 பேருக்கும் வடக்கில் யுத்தத்தில் அங்கவீன முற்றவர்களின் பிள்ளைகள் 5 பேர்களுக்கும் இந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வீஇராதாகிருஷ்ணன், பரீட்சை ஆணையாளர் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-12)

## வெள்ளை...

ள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். கைதான மூவரும் 28, 30 மறறும் 36 வயதுடையவர்கள் என தெரிவித்த பொலிஸார், இவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பகுதியினைச் சேர்ந்தவர்களாவர். கடந்த 16 ஆம் திகதி இராசாவின் தோட்டப் பகுதியில் உள்ள யுவதியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தகராறில் ஈடுபட்டுள்ள இந்த மூவரும், உன்னை வெகு விரைவில் வெள்ளை வான்கொண்டு வந்து கடத்துவோம் என மிரட்டிச் சென்ற நிலையில்,

குற்றத்தடுப்பு பொலிஸார், சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்துள்ளதுடன், வாகனத்தையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)


@ DCM (Jaffna)
With Leading CImA Lecturers
A/L Commerce English Medium
Commencement :- Sat 9.30 a.m (30/01/2016)
Call :- 0750475371
(C-3574)

உடனடி வேலைவாய்ப்புக்கள்
Ruhbins Hospital
PHSRC/PH/218

1. பேறுகாலமருத்துவிச்சிகள் - MIDWIFES
2. தாதியர்கள் (சத்திரசிகிச்சை) - NURSES FOR OPERATION THEATRE

மேற்குறித்த பதவிகளுக்கு குறித்த துறைகளில் சிறந்த அனுபமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தகுதிகள்

1. தாதியர் பயிற்சியில் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகுதி பெற்றிருத்தல்
2. அரச அங்கீகாரம்பெற்ற மருத்துவமனையில் பேறுகால மருத்துவிச்சியாக/தாதிய உத்தியோகத்தராக ( சத்திரசிகிச்சை)/சிரேஷ்ட பெண் கண்காணிப்பாளராக (Matron) அல்லது சிரேஷ்ட தாதியாகக் குறைந்தது இரண்டு வருடங்கள் நோயாளர் விடுதி (Ward) அல்லது சத்திரசிகிச்சை கூடத்தில் அனுபவம் பெற்றிருத்தல்.

★ விசேட மருத்துவப் பிரிவுகளில் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்/அனுபவங்கள் மேலதிக தகுதிகளாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(C-3578)

குறிப்பு

➤ தகுதிநிலைக்கேற்ப வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்
➤ தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படும்

சுயவிபரங்களுடன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்
RUHBINS HOSPITAL (PVT) LTD
160, Point Pedro Road, Nelliady ,Karaveddy.
Email- admin@ruhbinshospitals.com
Phone:- 0212261500, 021 492 7232 Mobile:- 0773760590

WEGS (PVT) LTD
தன்னிறைவுப் பொருளாதார வழிகாட்டல் உலகம்
World Economic Guidance For Self-Sufficiency

விவசாயம், சந்தைப்படுத்தல், மாற்றுவலுவுள்ளோரை வளப்படுத்தல், கல்வி போன்ற துறைகளை நடைமுறைபடுத்திவரும் WEGS நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் துறைக்கு பணியாளர்கள் தேவை.

பணிநிலை

01.வாடிக்கையாளர் சேவை முகவர்
02.பிரதேச உத்தியோகத்தர்
03.மாவட்ட உத்தியோகத்தர்

தகைமை

01) பிரதேச உத்தியோகத்தர் எனின்,
i).சந்தைப்படுத்தல் முன் அனுபவம் விரும்பத்தக்கது
ii).O/L பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும்

02)வாடிக்கையாளர் சேவை முகவர் அல்லது மாவட்ட உத்தியோகத்தராயின்
i). சந்தைப்படுத்தல் முன் அனுபவம்
ii).க.பொ.த.சா. தரம்
iii).மோட்டார் சைக்கிள்
iv).சாரதி அனுமதிப்பத்திரம்

தகுதி உடையோர் உங்கள் சுய விபரக் கோவையுடன் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி இரண்டு வாரம்.

அனுப்பவேண்டிய முகவரி,
தன்னிறைவுப் பொருளாதார வழிகாட்டல் உலகம்,
A9 வீதி, மிருசுவில், யாழ்ப்பாணம்.
மேலதிக தகவல்களுக்கு,
021-7201727, 076-7266048
(3470)

வீட்டுப் பணிப்பெண் தேவை
இலவச உணவு, இலவச தங்குமிடம். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு:-
0773916047
(சி-3577)

சமையல் உதவியாளர்கள் தேவை
நல்லூர் ஆலய சூழலில் அமைந்துள்ள உயர்தர சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர்கள் உடனடியாக தேவையாகவுள்ளார்கள். அனுபவமும் செயல்திறனையும் கருத்தில் கொண்டு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேரடியாக கீழ்க்காணும் முகவரிக்கு உடன் நேரில் சமுகமளிக்கவும்.
250, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 5556
(3419)

@ DCM
Weekday & weekend Classes
Young & Energetic Lecturer
English Class
G.C.E (O/L)
For Professionals
G.C.E (A/L)
IELTS
Call :- 0750475371 for timetable
(C-3574)

WORLD MOVIES – JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
LITTLE WOMEN
after Louisa May Alcott's novel.
(1949, color, 120 min.)
on Thursday 28 January 2016 at 4.00 p.m
at Alliance Française de Jaffna,
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 0212228093
English language. Free entrance.
பிரெஞ்சு வகுப்புகள் ஆரம்பம் 31.01.2016 2.pm
(3416)




## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு 15 - 11 - 1936

உதிர்வு 31 - 12 - 2015

கடந்த 31.12.2015 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

### அமரர் செல்வராசா மாணிக்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29.01.2016 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும் மறுநாள் 30.01.2016 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதை ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

அல்வாய் வடமத்தி, அல்வாய்.

செ.இராஜேஸ்வரன் குடும்பத்தினர் - 0779073686
செ.புவனேஸ்வரன் குடும்பத்தினர் - 0774966997

(C-3575) (S.P.M பிறின்ரேர்ஸ், பருத்தித்துறை)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.